# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

2190 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 21 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரசாங்க சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகளுக்கும் பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளுக்கும் அறிவுறுத்தல்களுக்கும் மேற்படி வர்த்தமானியைப் பார்க்கவும்

## பதவிகள் - வெற்றிடம்

### பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

### இலங்கைக் கணக்காளர் சேவையின் தரம் III இற்கு தொழிற்தகைமை மற்றும் திறமை அடிப்படையில் நேரடியாக ஆட்சேர்ப்புச் செய்தல் - 2017/2018

இலக்கம் 1670/33 மற்றும் 2010.09.10 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதி விசேட வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட இலங்கைக் கணக்காளர் சேவை பிரமாணக் குறிப்பின் 7.4 ஆம் பந்தியின் பிரகாரம் இலங்கைக் கணக்காளர் சேவையின் தரம் III ஐச் சேர்ந்த கணக்காளர் பதவிகளுக்கு தொழிற்தகைமை மற்றும் திறமை அடிப்படையில் நேரடியாக ஆட்சேர்ப்புச் செய்தல் தொடர்பான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இதனுடன் இணைத்துள்ள மாதிரிப்படிவத்தின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் 2020, செத்தெம்பர் மாதம் 21 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர், கொழும்பு 07, பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளருக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும். விண்ணபத்தினை அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "இலங்கைக் கணக்காளர் சேவையின் தரம் III இன் பதவிகளுக்காக நேரடியாக ஆட்சேர்ப்புச் செய்யும் விண்ணப்பம்" என்று குறிப்பிடுதல் வேண்டும்.

02. **ஆட்சேர்ப்பு முறை .-** கணக்காளர் சேவையின் தொழிற்தகைமை மற்றும் திறமை அடிப்படையில் தரம் III இல் காணப்படும் வெற்றிடங்களில் 26 இற்கு கூடாத தொகையினரை நியமிப்பதற்காக பின்வரும் தகைமைகளைக் கொண்ட நபர்களிடம் இருந்து பகிரங்க அறிவித்தல் மூலம் விண்ணப்பங்களைக் கோரி, அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் அனுமதிக்கப்படுகின்ற நேர்முகப் பரீட்சை குழுவொன்றினால் நடாத்தப்படுகின்ற கட்டமைப்புசார் நேர்முகப் பரீட்சை ஒன்றின் பெறுபேறுகளின் அடிப்படையில் உத்தியோகத்தர்கள் தெரிவு செய்யப்படுவர். விண்ணபதாரர்கள் தாம் விரும்பிய ஒரு மொழியில் கட்டமைப்புசார் நேர்முகப் பரீட்சைக்கு தோற்ற முடியும்.

03. **சேவை நிபந்தனைகள்.-** அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நடைமுறை ஒழுங்கு விதிகளுக்கும், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் இலக்கம் 1670/33 மற்றும் 2010.09.10 ஆந் திகதிய அதி விசேட வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட இலங்கை கணக்காளர் சேவைப் பிரமாணக் குறிப்பின் நிபந்தனைகள் மற்றும் அதில் செய்யப்பட்டுள்ள அல்லது இதன் பின்னர் செய்யக் கூடிய திருத்தங்களுக்கும் கட்டுப்படும் வகையில் தெரிவு செய்யப்படும் விண்ணபதாரர்கள் இலங்கைக் கணக்காளர் சேவையின் தரம் III இற்கு நியமிக்கப்படுவர்.

(i) இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியம் உரித்துடையதுமாகும். உங்களுக்கு கிடைக்கக்கூடிய ஓய்வூதியத் திட்டம் தொடர்பாக அரசாங்கத்தினால் எதிர்காலத்தில் எடுக்கப்படும் கொள்கை ரீதியான தீர்மானத்திற்கு தாங்கள் கட்டுப்படுதல் வேண்டும். மேலும் தாங்கள் விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு / தபுதாரர்கள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு பங்களிப்புச் செய்தல் வேண்டும். அரசாங்கத்தினால் காலத்திற்குக் காலம் தீர்மானிக்கப்படுகின்ற விதமாக தாங்களால் அது தொடர்பாக பங்களிப்புத் தொகை செலுத்தல் வேண்டும்.

(ii) அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 01/2014 இன் பிரகாரம் மொழித் தேர்ச்சியினையும் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

(iii) அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலொழுங்கு விதிகளுக்கும், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவைக்கும், அரசாங்க நிதி ஒழுங்கு விதிகளுக்கும், அரசாங்கத்தின் பிற ஒழுங்கு விதிகளுக்கும், சுற்றறிக்கைகள் மற்றும் அறிவுறுத்தல்களுக்கும் அவற்றிற்கு உரித்தான அவ்வப்போது பிரசுரிக்கப்படும் திருத்தங்களுக்கும் இந் நியமனம் கட்டுப்பட்டதாகும்.

(iv) தாங்கள் நேர்முகப் பரீட்சைக்கு தோற்றும் மொழி ஊடகமே நியமன மொழி ஊடகமாகவும் காணப்படும்.

04. **சம்பளக் கட்டமைப்பு மற்றும் மாதாந்த சம்பள அளவுத்திட்டம் .-** அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 3/2016 இனைக் கொண்ட சம்பள சுற்றறிக்கைக்கு ஏற்ப SL 1-2016 சம்பள வகுதிக்கு இணங்க இப் பதவிக்கு ரூபா 47,615.00 -10 × 1335 - 8 × 1630- 17×2170 - ரூபா 110,895.00 ஆக மாதாந்தச் சம்பள அளவுத்திட்டம் உரித்துடையதாகும்.

(தாங்கள் செலுத்துவது 2016.02.25 ஆம் திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 03/2016 இன் ஏற்பாடுகளுக்கு இணங்க அதன் அட்டவணை II இல் குறிப்பிட்டுள்ளவாறாகும்.)

05. **தொழில்சார் தகைமைகள்.-**

(i) இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் இறுதிப் பரீட்சை

அல்லது

(ii) பொதுநலவாய நாடு ஒன்றின் பட்டயம் பெற்ற கணக்காளர் நிறுவகம் ஒன்றின் இறுதிப் பரீட்சை

அல்லது

(iii) பொதுநலவாய நாடு ஒன்றின் பட்டயம் பெற்ற முகாமைத்துவக் கணக்காளர் நிறுவகம் ஒன்றின் இறுதிப் பரீட்சை

அல்லது

(iv) சான்றிதழ் பெற்ற பட்டயக் கணக்காளர் நிறுவகம் ஒன்றின் இறுதிப் பரீட்சை

அல்லது

(v) ஐக்கிய இராச்சியத்தின் சான்றிதழ் பெற்ற பட்டயக் கணக்காளர்களின் சங்கத்தின் இறுதிப் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

06. **உடல்சார் தகைமைகள் .-** சகல விண்ணப்பதாரர்களும் இலங்கையில் எந்த பிரதேசத்திலும் பணியாற்றக் கூடிய வகையில் ஏனைய அனைத்து வழிகளிலும் உடல் தகைமையைக் கொண்டிருத்தல் வேண்டும்.

07. **பிற தகைமைகள் .-**

(i) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

(ii) விண்ணப்பதாரர் சிறந்த நடத்தை உடையவராக இருத்தல் வேண்டும்.

(iii) எந்தவொரு மதத்தைச் சேர்ந்த மதகுருமார்கள் எவரும் இலங்கை கணக்காளர் சேவைப் பிரமாணக் குறிப்பின் 7.4.2.6 (iii) இன் பிரகாரம் நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகைமை பெறமாட்டார்.

(iv) தகைமை பெறும் திகதி :

விண்ணப்பதாரர் ஒருவர், சேவைக்கு நியமிப்பதற்குத் தேவையான தகைமையினைப் பெற்றவராக கருதுவதற்கு மேற்படி தகைமையினை விண்ணப்பம் கோரும் அறிவித்தல் வர்த்தமானியில் வெளியிடப்படும் தினத்தன்று அனைத்து வழிகளிலும் பூர்த்தி செய்திருக்க வேண்டியதுடன், தகைமைகளை உறுதி செய்வதற்காக சான்றிதழ்களின் பிரதிகளை விண்ணபத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

08. **வயதெல்லை.-** அறிவித்தல் வர்த்தமானியில் பிரசுரிக்கப்படும் தினத்தன்று 22 வயதை விட குறையாதவராகவும் 35 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

09. பின்வரும் ஆவணங்கள் விண்ணப்பதாரரினால் தனது விண்ணபப்படிவத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

(அ) பிறப்புச் சான்றிதழின் பிரதி ஒன்று,

(ஆ) ஆகக் கூடிய கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகள் பற்றிய சான்றிதழ்களின் பிரதிகள்

(இ) 2 நற்சான்றிதழ்கள் (இதிலொன்றினை பாடசாலையின் அதிபர்/பல்கலைக்கழக விரிவுரையாளர் அல்லது பேராசிரியர் ஒருவரிடமிருந்து பெற்றிருத்தல் வேண்டும்.)

10. திறமை அடிப்படையில் நேரடியாக ஆட்சேர்ப்புச் செய்யும் போது கட்டமைப்புசார் புள்ளிகள் வழங்கப்படும் நடைமுறைகள் பின்வருமாறு:

அடிப்படை தொழில்சார் தகைமைகளுக்கு மேலதிகமாக பெற்றுக்கொண்டுள்ள அதிஉயர் தகைமையொன்றுக்கு மாத்திரம் புள்ளி வழங்கப்படும்.

| தொடரிலக்கம் | பாடங்கள் | புள்ளிகள் | ஆகக்கூடிய புள்ளிகள் |
|---|---|---|---|
| 01 | **தொழிற்றகைமைகள்** | | |
| | i. இலங்கை தொழில்நுட்பக் கல்லூரி / இலங்கை உயர்தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்திலிருந்து பெறப்பட்ட கணக்கீடு அல்லது வாணிபத்தை ஒரு பாடமாகக் கொண்ட உயர் டிப்ளோமாதாரியாக இருத்தல் வேண்டும். | 15 | 50 |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழை திருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2020, செத்தெம்பர் மாதம் 11 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2020, ஓகத்து மாதம் 28 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரனியல் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2020 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

| தொடரிலக்கம் | பாடங்கள் | புள்ளிகள் | ஆகக்கூடிய புள்ளிகள் |
|---|---|---|---|
| | ii. பட்டயம்பெற்ற கணக்காளர்கள் நிறுவகத்தின் லைசன்டியேட் ii / இடைநிலைப் பரீட்சை / கணக்கீட்டு மற்றும் வியாபாரச் சான்றிதழ் பத்திரம் ii / வியாபார கட்டம், பட்டயம்பெற்ற முகாமைத்துவ கணக்காளர்கள் நிறுவகத்தின் ii ஆம் கட்டப் பரீட்சை, சான்றிதழ் பெற்ற கணக்காளர்களின் பட்டயச் சங்கத்தின் தொழிலில் I ஆம் பகுதிப் பரீட்சையில் சித்தியெய்தல். | 20 | |
| | iii. பட்டயம்பெற்ற கணக்காளர்கள் நிறுவகத்தின் இறுதி I ஆம் பகுதிப் பரீட்சையில் சித்தியெய்தல், பட்டயம்பெற்ற முகாமைத்துவ கணக்காளர்கள் நிறுவகத்தின் iii ஆம் கட்டப் பரீட்சையில் சித்தியெய்தல் அல்லது சான்றிதழ் பெற்ற பட்டயம்பெற்ற கணக்காளர்களின் சங்கத்தில் தொழில்சார் II ஆம் பகுதிப் பரீட்சையில் சித்தியெய்தல். | 30 | |
| | iv. இலங்கை பட்டயம்பெற்ற கணக்காளர்கள் நிறுவகத்தில் அல்லது பட்டயம்பெற்ற முகாமைத்துவ கணக்காளர்கள் நிறுவகத்தில் அல்லது பட்டயம்பெற்ற சான்றுப்படுத்தப்பட்ட கணக்காளர்கள் சங்கத்துடன் தொடர்புடைய அங்கத்துவத் தினைப் பெற்றிருத்தல் அல்லது வேறு ஏதேனும் அங்கீகரிக்கப் பட்ட தொழிற்தகைமைகள். | 40 | |
| | v. இலங்கை பட்டயம்பெற்ற கணக்காளர்கள் நிறுவகத்தில் அல்லது பட்டயம்பெற்ற முகாமைத்துவ கணக்காளர்கள் நிறுவகத்தில் அல்லது பட்டயம்பெற்ற சான்றுப்படுத்தப்பட்ட கணக்காளர்கள் சங்கத்தில் அல்லது ஏதேனும் பிற அங்கீகரிக்கப்பட்ட உயர்தொழில் தகைமைகளில் அதிஉயர் அங்கத்துவத்தினைப் பெற்றிருத்தல் வேண்டும். | 50 | |
| 02. | **கல்வித் தகைமைகள்** | | 25 |
| | i. பொதுப் பட்டம் - சாதாரண சித்தி | 10 | |
| | ii. விசேட பட்டம் - சாதாரண சித்தி | 12 | |
| | iii. 2 ஆம் வகுப்புடன் பொதுப்பட்டம் | 12 | |
| | iv. 2 ஆம் வகுப்புடன் விசேட பட்டம் | 13 | |
| | v. 1 ஆம் வகுப்புடன் பொதுப்பட்டம் | 13 | |
| | vi. 1 ஆம் வகுப்புடன் விசேட பட்டம் | 15 | |
| | vii. பட்டப்பின் டிப்ளோமா (அரச நிதி முகாமைத்துவம், நிதி முகாமைத்துவம், அரச நிதி, கணக்கீடு, அபிவிருத்தி நிதி, வாணிபம், பொருளியல், வியாபார நிர்வாகம், அரச முகாமைத்துவம், தகவல் தொழில்நுட்பம், அரசாங்கக் கொள்கை, செயற்திட்ட முகாமைத்துவம் என்ப வற்றுடன் தொடர்புடைய துறைகள்) | 17 | |
| | viii. பட்டப்பின் பட்டம் – ஆய்வுக் கட்டுரை இன்றி (அரச நிதி முகாமைத்துவம், நிதி முகாமைத்துவம், அரச நிதி, கணக்கீடு, அபிவிருத்தி நிதி, வாணிபம், பொருளியல், வியாபார நிர்வாகம், அரச முகாமைத்துவம், தகவல் தொழில்நுட்பம், அரசாங்கக் கொள்கை, செயற்திட்ட முகாமைத்துவம் என்பவற்றுடன் தொடர்புடைய துறைகள்) | 20 | |
| | ix. பட்டப்பின் பட்டம் - ஆய்வுக்கட்டுரையுடன் (அரச நிதி முகாமைத்துவம், நிதி முகாமைத்துவம், அரச நிதி, கணக்கீடு, அபிவிருத்தி நிதி, வாணிபம், பொருளியல், வியாபார நிர்வாகம், அரச முகாமைத்துவம், தகவல் தொழில்நுட்பம், அரசாங்கக் கொள்கை, செயற்திட்ட முகாமைத்துவம் என்பவற்றுடன் தொடர்புடைய துறைகள்) | 25 | |
| 03. | **அனுபவம்** தொழிற்தகைமைகளைப் பெற்றுக் கொண்டதன் பின்னர் அடைந்து கொண்ட அனுபவங்கள் இங்கு கவனத்திற் கொள்ளப்படும். ஒரு வருடத்திற்கு 05 புள்ளிகள் வீதம் 4 வருடங்களுக்கு 20 புள்ளிகள் இங்கு வழங்கப்படும். | | 20 |
| 04. | **நேர்முகப் பரீட்சைக் குழுவிற்காக** நேர்முகப் பரீட்சைக்கு முகங்கொடுக்கும் போது காட்டும் திறமைக்காக நேர்முகப் பரீட்சைக் குழு திருப்தியுறும் வகைக்கு ஏற்ப புள்ளிகள் வழங்கப்படும். | | 05 |
| | **மொத்தம்** | | 100 |

11. அரசாங்க சேவையில் அல்லது மாகாண அரசாங்க சேவையில் பணியாற்றும் அலுவலர் ஒருவரினால் தமது விண்ணப்பப்படிவத்தின் மூலப் பிரதியினை தமது திணைக்களத் தலைவரின் ஊடாக, “ செயலாளர், பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு, சுதந்திர சதுக்கம், கொழும்பு 07” எனும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். அதன் பிரதியொன்றினை விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதிக்கு முன்னர் நேரடியாக இம் முகவரிக்கு அனுப்பி வைக்க முடியும்.

12. **விண்ணப்பிக்கும் முறைமை :**

(அ) விண்ணப்பப்படிவமானது இந்த அறிவித்தலுடன் இணைத்துள்ள மாதிரிப் படிவத்திற்கு அமைவாக A4 அளவிலான கடதாசி ஒன்றில் விண்ணப்பதாரரினாலேயே பூர்த்தி செய்யப்படல் வேண்டும்.

(ஆ) விண்ணப்பப்படிவத்தில் இலக்கம் 01 முதல் 05 வரையான விடயங்களை முதல் பக்கத்தில் குறிப்பிடுதல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தை விண்ணப்பதாரர் நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகைமை பெறும் மொழியில் நிரப்புதல் வேண்டும். எவ்வாறாயினும் விண்ணப்பத்தைத் தயாரிக்கும் போது அதன் தலைப்பை அரசகரும மொழிக்குப் பதிலாக ஆங்கில மொழியிலும் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) குறிப்பிட வேண்டியமை கட்டாயமானதாகும்.

(இ) சகல விதத்திலும் முழுமையாக பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்பட இடமுண்டு. தபாலில் விண்ணப்பமொன்று காணாமற் போதல் அல்லது தாமதமாதல் தொடர்பாக முன்வைக்கப்படும் முறைப்பாடுகள் தொடர்பாக கவனம் செலுத்தப்பட மாட்டாது.

(ஈ) பரீட்சார்த்தி ஒருவரினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள யாதேனுமொரு தகவல் அவர் அதனை பிழையானது என தெரிந்து கொண்டே சமர்ப்பித்துள்ளமை கண்டுபிடிக்கப்படும் பட்சத்தில், அல்லது யாதேனுமொரு முக்கிய விடயத்தை அவர் வேண்டுமென்றே மறைத்திருக்கும் பட்சத்தில், நியமனம் பெறுவதற்கு அவர் தகைமையற்றவராக கருதப்படுவதற்கு இடமுண்டு. அரசாங்க சேவைக்கு நியமிக்கப்பட்டதன் பின்னர் இவ்வாறான ஒன்றினை கண்டுபிடிக்கும் பட்சத்தில் சேவையிலிருந்து பதவி நீக்கம் செய்ய முடியும்.

13. நியமனம் நடைமுறைப்படுத்தப்படும் திகதி மற்றும் நியமனம் செய்யப்படும் எண்ணிக்கை அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படும். நிலவுகின்ற வெற்றிடங்கள் அனைத்தையும் அல்லது அதில் ஒரு பகுதியினை நிரப்புவதற்கு அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவிற்கு அதிகாரமுண்டு.

14. தெரிவு செய்யப்படும் உத்தியோகத்தர் ஒருவர் மூன்று வருட தகுதிகாண் காலம் முடிவடைந்ததன் பின்னர் பதவியில் நிரந்தரமாக்குவதற்கு முன்னர் பின்வரும் பாடங்களை உள்ளடக்கிய முதலாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

(i) அரசாங்க நிதி ஒழுங்கு விதிகள்
(ii) சட்டம் மற்றும் முகாமைத்துவம்
(iii) நிர்வாகம்
(iv) அறிக்கை எழுதுதல் மற்றும் முகாமைத்துவத்திடம் தகவல்களை சமர்ப்பித்தல்

15. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலங்களில் பிரசுரிக்கப்படும் இவ்வறிவித்தலில் ஒவ்வொரு மொழியிலும் பிரசுரிக்கப்படும் போது ஏதேனும் வித்தியாசங்கள் காணப்படுமாயின் சிங்கள மொழியில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தல் வலுவிலிருக்கும்.

அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளையின் பிரகாரம்,

ஜே. ஜே. ரத்னசிரி
செயலாளர்
பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண
சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு.

பொது நிருவாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள்
மற்றும் உள்ளூராட்சி அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 07,
2020, ஒகத்து 04.

**இலங்கைக் கணக்காளர் சேவையின் தரம் III இற்கான நியமனம்**
**தொழிற்தகைமை மற்றும் திறமை அடிப்படையில் நேரடி நியமனம் - 2017/2018**

## DIRECT RECRUITMENT TO THE GRADE III OF SRI LANKA ACCOUNTANT'S SERVICE ON MERIT AS PER PROFESSIONAL QUALIFICATION - 2017/2018

இலக்கம் [ ]
(அலுவலகப் பயன்பாட்டிற்காக)

நேர்முகப் பரீட்சைக்கு தோற்றும் மொழி மூலம் :
சிங்களம் - 1, தமிழ் - 2, ஆங்கிலம் -3 [ ]

(உரிய இலக்கத்தை பெட்டியினுள் எழுதவும்) மொழியை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

01 1:1 முதலெழுத்துக்களுடன் பெயர் : Mr./Mrs./Miss. ......................................................
(ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) உ+ம் : Mr. PERERA, D. T.
1.2 முழுப் பெயர் : ......................................................................................
(ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) ............................................................................
1.3 முழுப் பெயர் : .......................................................................................
(சிங்களத்தில்/தமிழில்)
1.4 தேசிய அடையாள அட்டை இலக்கம் :

02 2.1 நிரந்தர முகவரி :.............................................................................
2.2 அலுவலக முகவரி: .................................................................................
(அரசாங்க சேவை /மாகாண அரசாங்க சேவையில் பணியாற்றும் அலுவலர் ஒருவர் அவரது அலுவலக முகவரியை எழுதுதல் வேண்டும். முகவரியில் ஏதேனும் மாற்றங்கள் ஏற்படும் பட்சத்தில், அதுபற்றி உடனடியாக அறிவித்தல் வேண்டும்.)
2.3 தொலைபேசி இலக்கம் :..............................

03. 3.1 பிறந்த திகதி : ஆண்டு:................மாதம்:................. திகதி:...................

3.2 அறிவித்தலானது வர்த்தமானியில் பிரசுரிக்கப்படும் திகதிக்கு வயது
வருடங்கள் : ........... மாதங்கள் : .......... நாட்கள் : ......

04. பால்நிலை : | ஆண் | பெண் |

05. விவாகமானவரா/விவாகமாகாதவரா என்பது பற்றி : | விவாகமானவர் | விவாகமாகாதவர் |

06. விண்ணப்பம் கோரப்படும் அறிவித்தல் இலக்கம் 05 இன் கீழ் எடுத்துக் காட்டப்படும் அடிப்படை தகைமையினைப் பெற்றுக் கொள்ளல் தொடர்பான விபரம்.

| தகைமைகள் | பெற்றுக்கொண்ட நிறுவனம் | பெற்றுக்கொண்ட திகதி |
|---|---|---|
| ................................ | ........................................ | .................................... |
| ................................ | ........................................ | .................................... |

(சான்றிதழ்களின் பிரதிகளை விண்ணப்பத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும்.)

07. மொழித் தேர்ச்சி தொடர்பாக சித்தியடைந்துள்ள உச்ச அளவிலான பரீட்சை :

| (i) சிங்களம் | (ii) தமிழ் | (iii) ஆங்கிலம் |
|---|---|---|
| (1)<br>(2)<br>(3) | | |

08. கல்வி மற்றும் தொழிற் தகைமைகள் - (பெற்றுக் கொண்டுள்ள உயர் பட்டம், குறித்த நிறுவனங்களின் பெயர், வகுப்பொன்றாயின் அதன் பெயர், அவற்றின் திகதிகள் மற்றும் தோற்றிய பாடங்கள், தொழிற் தகைமைகளின் விபரங்களைக் குறிப்பிடவும். தகைமைகளை உறுதிப்படுத்தும் வகையில் அவசியப்படும் சான்றிதழ்களின் பிரதிகளை விண்ணப்பத்துடன் சமர்ப்பிப்பது கட்டாயமாகும்.)

| கல்வி மற்றும் தொழிற் தகைமை | நிறுவனம் | சித்தியடைந்திருத்தல் (வகுப்பு) | செல்லுபடியாகும் திகதி | பாடங்கள் |
|---|---|---|---|---|
| | | | | |
| | | | | |
| | | | | |

09. தற்போது புரியும் தொழில் மற்றும் அதற்கு முன்னர் வகித்த சகல பதவிகளும் :- தொழிலில் இணைந்த திகதி, அதிலிருந்து விலகிய திகதி, வருடாந்தச் சம்பளம் மற்றும் தொழிலை முடிவுறுத்தியமைக்கான காரணம் என்பவற்றினைக் குறிப்பிடவும். (சேவை அனுபவத்தினை உறுதிப்படுத்துவதற்கு அவசியப்படும் சான்றிதழ்களின் பிரதிகளை விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்).

| பதவி | இருந்து | வரை | வருடாந்தச் சம்பளம் (ரூ.) | சேவையினை முடிவுறுத்தியமைக்கான காரணம் |
|---|---|---|---|---|
| | | | | |
| | | | | |

10. நீங்கள் ஏதேனுமொரு குற்றத்திற்காக நீதிமன்றத்தினால் குற்றவாளியாக்கப்பட்டுள்ளீரா? அவ்வாறாயின், திகதி மற்றும் வழக்கு இலக்கம் என்பவற்றுடன் முழு விபரத்தையும் தரவும் :-
......................................................................................................................................................
......................................................................................................................................................

11 வேறு ஏதேனும் தகவல்கள் இருப்பின் குறிப்பிடவும். : ........................................................................

12. நன்நடத்தைச் சான்றிதழைப் பெற்றுக் கொள்பவர்கள் தவிர்ந்த உம்மைப் பற்றிய தகவல் அறிந்த நன்கு விசாரிக்கக் கூடிய இரண்டு நபர்களுடைய பெயர் மற்றும் முகவரி என்பவற்றினை குறிப்பிடவும் :

(1)
(2)

இவ்விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் எனது அறிவிற்கு எட்டிய வரையிலும் மற்றும் எனது நம்பிக்கையின் பிரகாரமும் உண்மையானவை என இத்தால் உறுதிப்படுத்துகிறேன். இதில் காணப்படும் தகவல்களில் ஏதும் பொய்யானவை அல்லது பிழையானவை என கண்டுபிடிக்கப்படும் பட்சத்தில் நான் தகுதியற்றவனாவதற்கும், எனக்கு எதுவித நஷ்டஈடும் வழங்காது என்னை சேவையில் இருந்து அகற்றுவதற்கும் உட்படுவதனை நான் அறிந்து வைத்துள்ளேன்.

..............................................
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி : ..............**திணைக்களத் தலைவரின் சான்றிதழ்**

**விண்ணப்பதாரர் அரசாங்க சேவையில் அல்லது மாகாண அரசாங்க சேவையில் பணியாற்றும் பட்சத்தில் அவர் பற்றிய திணைக்களத் தலைவரின் சிபாரிசு**

இந்த விண்ணப்பத்தை சமர்ப்பிக்கும் ..................................... அவர்கள் ................. ஆந் திகதி முதல் ................. ஆந் திகதிய வரை அலுவலகத்தில் சேவையாற்றுகிறார் எனவும், அவரது வேலை மற்றும் நடத்தை என்பன திருப்திகரமானதாக அமைந்துள்ளன எனவும் இத்தால் உறுதிப்படுத்துகிறேன்.

.....................................................................
திணைக்களத் தலைவரின் கையொப்பமும் பதவி முத்திரையும்

திகதி : ..............

08-550

---

**இலங்கைப் பாராளுமன்றம்**

**பதவி வெற்றிடங்கள்**

குளிரூட்டி, குளிர்சாதனத் தொழில்நுட்பவியலாளர்

பாராளுமன்ற செயலாளர் நாயகத்தின் பணியாட்டொகுதியில் குளிரூட்டி, குளிர்சாதனத் தொழில்நுட்பவியலாளர் பதவியில் நிலவும் வெற்றிடங்களுக்கு நல்ல தேகாரோக்கியமும் சிறந்த நல்லொழுக்கமும் உடைய இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இதன் கீழ்க் காணப்படும் மாதிரிப்படிவத்திற்கு அமைய தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் 2020 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 04 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக, "பாராளுமன்ற செயலாளர் நாயகம், இலங்கைப் பாராளுமன்றம், ஸ்ரீ ஜயவர்த்தனபுர, கோட்டே" எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். விண்ணப்பத்தை தாங்கி வரும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "குளிரூட்டி, குளிர்சாதன தொழில்நுட்பவியலாளர்" எனக் குறிப்பிடப்படுதல் வேண்டும். (மேலும் இந்த விளம்பரம் தொடர்பான விபரங்களை www.parliament.lk எனும் இணையத்தளத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்).

01. **சம்பள அளவுத்திட்டம்.**- 2016.11.07 ஆந் திகதிய 06/2016 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் I ஆம் அட்டவணைக்கு இணங்க இந்தப் பதவிக்கு உரித்தாகும். மாதாந்த சம்பள அளவுத்திட்டம் ரூ. 28,250-9×300-10×330- 3× 380- ரூபா 35,390.00 (சகல மேலதிகக் கொடுப்பனவுகளும் அடங்கலாக இந்த சம்பள அளவுத் திட்டத்திற்குரிய ஆகக்குறைந்த ஆரம்ப சராசரி மாதாந்த சம்பளம் ரூபா 62,000.00) ஆகும்.

02. **வயதெல்லை.**- விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு 18 வயதுக்கு குறையாதவராகவும் மற்றும் 35 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

03. **கல்வித் தகைமைகள்.**- க.பொ.த. (சாதாரண தரம்) பரீட்சையில் சிங்களம் அல்லது தமிழ், கணிதம் மற்றும் ஆங்கிலம் ஆகிய பாடங்கள் அடங்கலாக 6 பாடங்களில் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாத அமர்வுகளில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

04. **தொழில்சார் தகைமைகள்.**- குளிரூட்டி, குளிர்சாதனத் தொழில்நுட்பவியல் துறையில் தேசிய வாழ்க்கைத்தொழில் தகைமை 4 ஆம் மட்டத்திலான (NVQ Level 4) ஒரு சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும்.

05. **அனுபவம்.**- அங்கீகரிக்கப்பட்டுள்ள ஒரு நிறுவனத்திலிருந்து குளிரூட்டி, குளிர்சாதனத் தொழில்நுட்பவியல் துறையில் மூன்று வருடத்திற்கு குறையாத அனுபவத்தை பெற்றிருத்தல் வேண்டும்.

06. **ஆட்சேர்ப்பு முறை.**- செயன்முறைப் பரீட்சை மற்றும் நேர்முகப் பரீட்சை ஆகியவற்றின் மூலம் ஆட்சேர்த்துக் கொள்ளப்படும்.

07. **சேவையில் அமர்த்தும் நியதிகளும், நிபந்தனைகளும்:**

(i) இந்தப் பதவி நிரந்தரமானது. இந்தப் பதவிக்குரிய ஓய்வூதிய சம்பள அளவுத்திட்டம் தொடர்பில் அரசாங்கம் எதிர்காலத்தில் எடுக்கும் கொள்கை ரீதியான தீர்மானத்திற்கு விண்ணப்பதாரர்கள் இணங்க வேண்டும். தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர்கள் முதலில் மூன்று (03) வருட தகுதிகாண் காலத்திற்கு உட்படுத்தப்படுவார்கள். அரசாங்க சேவையில் அல்லது மாகாண அரசாங்க சேவையில் நிரந்தர ஓய்வூதிய உரித்துடைய பதவியில் நிரந்தரமாக்கப்பட்டுள்ள ஆளொருவர் தெரிவு செய்யப்படுவாராயின், அவர் ஒரு வருட கால பதில் கடமை அடிப்படையில் நியமிக்கப்படுவார்.

(ii) தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர்கள் பாராளுமன்ற செயலாளர் நாயகத்தின் பணியாட்டொகுதிக்கு ஏற்புடையதான நிதி மற்றும் திணைக்கள ஒழுங்குவிதிகளுக்கு இயைந்தொழுகுதல் வேண்டும்.

(iii) தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர்கள் அரசாங்கத்தினால் நிர்ணயிக்கப்படும் ஒரு விகிதாசாரத்திற்கு அமைய விதவைகள்/ தபுதாரர்கள், அநாதைகள் ஓய்வூதிய நிதியத்திற்கு தமது சம்பளத்திலிருந்து பங்களிப்பு தொகையை செலுத்த வேண்டும்.

(iv) தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர்கள் மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவார்கள்.

(v) தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர்கள் நியமிக்கப்படுவதற்கு முன்னர் அவர்கள் பற்றிய பாதுகாப்பு சான்றறிக்கைகள் பெற்றுக் கொள்ளப்படும்.

08. விண்ணப்பதாரர்கள் பின்வரும் சான்றிதழ்களின் பிரதிகளை (மூலப் பிரதிகள் அல்ல) தத்தமது விண்ணப்பங்களுடன் இணைத்தனுப்புதல் வேண்டும். மூலப் பிரதிகளைக் கோரும் பட்சத்தில் அவற்றை சமர்ப்பித்தலும் வேண்டும் :

(அ) பிறப்புச் சான்றிதழ் ;
(ஆ) கல்வித் தகைமைகளை உறுதிப்படுத்தும் சான்றிதழ்கள் ;
(இ) தொழில்சார் தகைமைகளை உறுதிப்படுத்தும் சான்றிதழ்கள் ;
(ஈ) அனுபவத்தை உறுதிப்படுத்தும் சான்றிதழ்கள்.

09. அரசாங்க/மாகாண அரசாங்க/அரசாங்க கூட்டுத்தாபனங்களில்/நியதிச்சட்ட சபைகளில் பணியாற்றுகின்ற விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களை உரிய திணைக்கள/ நிறுவனத் தலைவரின் ஊடாக அனுப்பி வைக்க வேண்டும்.

10. பதவியைப் பெற்றுக் கொள்ளும் நோக்கில் ஏதாவது ஒரு வகையில் செல்வாக்கைப் பிரயோகித்தலானது தகுதியின்மைக்கு வழிவகுக்கும்.

11. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியின் பின்னர் கிடைக்கப்பெறும் அல்லது மேலே குறிப்பிடப்பட்டுள்ள சான்றிதழ்கள் இன்றி அனுப்பப்படும் அல்லது திணைக்கள / நிறுவனத் தலைவர்களினூடாக அனுப்பப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதி திகதியின் பின்னர் திணைக்கள/நிறுவன தலைவர் ஊடாக கிடைக்கப் பெறும் விண்ணப்பங்களும் மாதிரிப்படிவத்திற்கு அமையத் தயாரிக்கப்படாத விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

டபிள்யூ. பி. டீ. தசநாயக்க,
பாராளுமன்றச் செயலாளர் நாயகம்.

இலங்கைப் பாராளுமன்றம்,
ஸ்ரீ ஜயவர்த்தனபுர கோட்டே,
2020, ஓகத்து 21.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கைப் பாராளுமன்றம்**

குளிரூட்டி, குளிர்சாதனத் தொழில்நுட்பவியலாளர் பதவி

01. (அ) முதலெழுத்துக்களுடன் பெயர் (தமிழில்) :......................................................................................
......................................................................................................................................

(ஆ) முதலெழுத்துக்களால் குறிக்கப்படும் பெயர்கள் (தமிழில்) :...................................................................
......................................................................................................................................
......................................................................................................................................

(இ) முழுப்பெயர் (ஆங்கில கெப்பிற்றல் எழுத்துக்களில்) (Mr./Mrs. /Miss) :.............................................
......................................................................................................................................
......................................................................................................................................

02. தேசிய அடையாள அட்டை இலக்கம் : | | | | | | | | | | | | |

03. (அ) சொந்த முகவரி:.........................................................................................................

தொலைபேசி இலக்கம்: | | | | | | | | | | |

(ஆ) அலுவலக முகவரி: ..........................................................................................................

தொலைபேசி இலக்கம்: | | | | | | | | | | |

(இ) அனுமதி அட்டையை அனுப்பி வைக்க வேண்டிய முகவரி :

தனிப்பட்ட ☐ அலுவலக ☐

04. (அ) பிறந்த திகதி : ஆண்டு :.........., மாதம் :.........., திகதி :..........
(பிறப்புச் சான்றிதழின் பிரதி இணைக்கப்படுதல் வேண்டும்)

(ஆ) விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு வயது:
வருடங்கள்:.......... மாதங்கள்:.......... நாட்கள்:..........

05. விவாகமானவரா /விவாகமாகாதவரா : (விவாகமானவர்/விவாகமாகாதவர்)

06. பால் நிலை : (ஆண் /பெண் ) :

07. இலங்கைப் பிரசையா எனும் விபரம்: (ஆம்/இல்லை)

08. கல்வித் தகைமைகள்: (சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படுதல் வேண்டும்.)

| பரீட்சை | பாடம் | பெற்ற சித்திகள் | சித்தியடைந்த ஆண்டு |
|---|---|---|---|
| க. பொ. த. (சா./த.) | சிங்களம்/தமிழ் | | |
| | கணிதம் | | |
| | ஆங்கிலம் | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

09. உயர் கல்வி/தொழில் தகைமைகள்: (சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படுதல் வேண்டும்)
.....................................................................................................................
.....................................................................................................................
.....................................................................................................................

10. அனுபவம்: (சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படுதல் வேண்டும்)
.....................................................................................................................
.....................................................................................................................
.....................................................................................................................

11. தற்போதைய தொழில் பற்றிய விபரம் :

(அ) நிறுவனத்தின் பெயரும் முகவரியும் :..........................................................................

(ஆ) தற்போது வகிக்கும் பதவி: ..........................................................................

(இ) முதல் நியமனத் திகதி: ..........................................................................

(ஈ) மாதாந்த அடிப்படைச் சம்பளம்: ..........................................................................

(உ) கொடுப்பனவுகள்: ..........................................................................

(ஊ) மொத்த சம்பளம்: ..........................................................................

12. நீர் ஏதேனும் குற்றச்செயல் தொடர்பில் நீதிமன்றத்தில் குற்றவாளியாகக் கணிக்கப்பட்டுள்ளீரா? (ஆம்/இல்லை)
அவ்வாறாயின், அது பற்றிய விபரங்களைக் குறிப்பிடுக:

.....................................................................................................................

.....................................................................................................................

.....................................................................................................................

13. நீர் இதற்கு முன்னர் அரசாங்க சேவையில் பணியாற்றியுள்ளீரா? (ஆம்/இல்லை)
அவ்வாறாயின், அது பற்றிய விபரங்களைக் குறிப்பிடுக:

.....................................................................................................................

.....................................................................................................................

.....................................................................................................................

என்னால் இந்த விண்ணப்பப்படிவத்தில் தரப்பட்டுள்ள விபரங்கள் யாவும் உண்மையானவையும் சரியானவையும் என உறுதிப்படுத்துகின்றேன். இதில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதாவது ஒரு விபரம் தவறானது அல்லது பொய்யானதென நான் தெரிவு செய்யப்படுவதற்கு முன்னர் கண்டறியப்பட்டால் இப்பதவிக்கு நான் தகுதியற்றவனாவேன் என்பதையும் தெரிவு செய்யப்பட்டதன் பின்னர் அவ்வாறு கண்டறியப்பட்டால் எதுவித நட்டஈடுகளுமின்றி சேவையிலிருந்து நீக்கப்படுவேன் என்பதையும் நன்கறிவேன்.

திகதி: ........................................ ..........................................................
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

---

**திணைக்கள/நிறுவனத் தலைவரின் சான்றிதழ்**

(அரசாங்க /மாகாண அரசாங்க நிறுவனங்களில் பணியாற்றும் விண்ணப்பதாரிகளுக்கு மாத்திரம்)

பாராளுமன்ற செயலாளர் நாயகம்,

இந்த நிறுவனத்தில்.......................................................................... பதவியை வகிக்கும் திரு./திருமதி/ செல்வி.......................................................................... அவர்களின் விண்ணப்பத்தை சிபாரிசு செய்து சமர்ப்பிக்கின்றேன். இவர் பதவியில் நிரந்தரமாக்கப்பட்டுள்ளார்/நிரந்தரமாக்கப்படவில்லை. இவரின் வேலைகள் மற்றும் நடத்தை என்பன திருப்திகரமானது என்றும், இவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் ஏதுமில்லை என்றும், இவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் எதனையும் மேற்கொள்ளும் அபிப்பிராயமில்லை என்றும் உறுதி செய்கின்றேன். இவர் இப்பதவிக்குத் தெரிவு செய்யப்பட்டால், இவரை சேவையிலிருந்து விடுவிக்க முடியும்/முடியாது.

திகதி: .............................. ..........................................................
திணைக்கள /நிறுவனத்
தலைவரின் கையொப்பம்.
(உத்தியோகபூர்வ முத்திரை)

08-638

**இலங்கைப் பாராளுமன்றம்**

பிரதி இணைப்பு பொறியியலாளர் பதவி

பாராளுமன்ற செயலாளர் நாயகத்தின் பணியாட்டொகுதியில் வெற்றிடம் நிலவுகின்ற பிரதி இணைப்பு பொறியியலாளர் பதவிக்கு நல்ல தேகாரோக்கியமும் நல்லொழுக்கமும் உடைய இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இதில் தரப்பட்டுள்ள மாதிரிப் படிவத்திற்கு அமைய தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் 2020 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 04 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடிய வகையில் "பாராளுமன்ற செயலாளர் நாயகம், இலங்கைப் பாராளுமன்றம், ஸ்ரீ ஜயவர்த்தனபுர கோட்டே" எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். விண்ணப்பத்தை தாங்கி வருகின்ற கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "பிரதி இணைப்பு பொறியியலாளர் பதவி" எனக் குறிப்பிடப்படுதல் வேண்டும் (இந்த விளம்பரம் தொடர்பான விபரங்களை www.parliament.lk எனும் இணையத்தளத்தினூடாகவும் பெற்றுக்கொள்ளலாம்).

01. **சம்பள அளவுத்திட்டம்**.- 2016.11.07 ஆந் திகதிய 06/ 2016 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் அட்டவணை I இற்கு இணங்க இந்தப் பதவிக்கான மாதாந்த சம்பள அளவுத்திட்டம் ரூபா 62,595.00 - 7 × 1,630/ 6 × 2,170 - ரூபா 87,025.00 ஆகும். (பட்டய பொறியியலாளர் கொடுப்பனவு மற்றும் ஏனைய மேலதிக கொடுப்பனவுகள் அடங்கலாக இந்த சம்பள அளவுத்திட்டத்திற்குரிய ஆரம்ப முழுமொத்த மாதாந்த சம்பளம் ரூபா 150,000.00 அளவில் காணப்படும்).

02. **வயதெல்லை**.- விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு 30 வயதுக்கு குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும் (பாராளுமன்ற பணியாட்டொகுதியிலுள்ள சேவையில் நிரந்தரமாக்கப்பட்டுள்ள விண்ணப்பதாரர்களுக்கும் அரசாங்க/மாகாண அரசாங்க சேவையில் நிரந்தரமாக்கப்பட்டுள்ள விண்ணப்பதாரர்களுக்கும் இந்த உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது).

03. **கல்வித் தகைமைகள்**.- பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக் கழகத்தில் பொறியியல் (மின்னியல்/இலத்திரனியல்) துறையில் பட்டத்தை பெற்றிருத்தல்.

04. **தொழிற் தகைமைகள்**.- 2017ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க இலங்கை பொறியியலாளர்கள் மன்றத்தினது சட்டத்தின் பிரகாரம் தாபிக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு பொறியியல் நிறுவனத்தின் பட்டய பொறியியல் உறுப்புரிமையை பெற்றிருத்தல்.

05. **அனுபவம்**.- மின்/ இலத்திரனியல் பொறியியல் துறையில் அனுபவத்தை பெற்றிருக்க வேண்டும். கட்டிடங்கள் பராமரிப்பு பற்றிய அனுபவமுடைய நபர்களுக்கு முந்துரிமை வழங்கப்படும்.

**குறிப்பு**.- மேற்குறித்த விடயம் (3) இல் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளையுடையதும் பாராளுமன்ற பணியாட்டொகுதியில் 10 வருடத்திற்கு குறைந்த சேவைக் காலத்தை உடையதுமான விண்ணப்பதாரர்களும் இந்தப் பதவிற்கு விண்ணப்பிக்கலாம்.

06. **ஆட்சேர்ப்பு முறை**.- நேர்முகப் பரீட்சை ஒன்றின் மூலம் ஆட்சேர்த்துக் கொள்ளப்படும்.

07. **சேவையில் அமர்த்தும் நியதிகளும் நிபந்தனைகளும்**:

(i) இந்தப் பதவி நிரந்தரமானது. இந்தப் பதவிக்குரிய ஓய்வூதிய சம்பள அளவுத்திட்டம் தொடர்பில் அரசாங்கத்தினால் எதிர்காலத்தில் எடுக்கப்படும் கொள்கை ரீதியான தீர்மானத்திற்கு விண்ணப்பதாரர்கள் இயைந்தொழுக வேண்டும். தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரர்கள் முதலில் மூன்று (03) வருட தகுதிகாண் கால அடிப்படையில் நியமிக்கப்படுவார்கள். ஏற்கனவே அரசாங்க சேவையில் அல்லது மாகாண அரசாங்க சேவையில் ஓய்வூதிய உரித்துடைய பதவியில் நிரந்தரமாக்கப்பட்டுள்ள எவரேனும் நபர் ஒருவர் தெரிவு செய்யப்பட்டால் அத்தகைய நபர் ஒரு வருட பதில் கடமை கால அடிப்படையில் நியமிக்கப்படுவார்.

(ii) தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகள் பாராளுமன்ற செயலாளர் நாயகத்தின் பணியாட்டொகுதிக்கு ஏற்புடைய நிதி மற்றும் திணைக்கள ஒழுங்குவிதிகளுக்கு இயைந்தொழுக வேண்டும்.

(iii) தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர்கள் அநாதைகள், விதவைகள்/தபுதாரர் ஓய்வூதிய நிதியத்திற்கு அவரது சம்பளத்திலிருந்து அரசாங்கம் தீர்மானிக்கும் விகிதாசாரத்தில் ஒரு பங்களிப்பு தொகையை செலுத்த வேண்டும்.

(iv) தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர்கள் மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவார்கள்.

(v) தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர்கள் நியமிக்கப்படுவதற்கு முன்னர் அவர்கள் தொடர்பான பாதுகாப்பு பற்றிய சான்றறிக்கைகள் பெற்றுக் கொள்ளப்படும்.

08. கீழ்காணும் சான்றிதழ்களின் (மூலப் பிரதிகளல்ல) பிரதிகளை விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களுடன் இணைத்து அனுப்புதல் வேண்டும். சமர்ப்பிக்குமாறு கேட்கப்படும் பட்சத்தில் மாத்திரம் அத்தகைய சான்றிதழ்களின் மூலப் பிரதிகளை சமர்ப்பிக்க வேண்டும் :

(அ) பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் ;

(ஆ) கல்வித் தகைமைகளை உறுதிப்படுத்தும் சான்றிதழ்கள் ;

(இ) தொழில்சார் தகைமைகளை உறுதிப்படுத்தும் சான்றிதழ்கள் ;

(ஈ) அனுபவத்தை உறுதிப்படுத்தும் சான்றிதழ்கள்.

09. அரசாங்க/ மாகாண அரசாங்க நிறுவனங்களில் பணியாற்றுகின்ற விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களை அந்தந்த திணைக்கள/நிறுவன தலைவரின் ஊடாக அனுப்பி வைக்க வேண்டும்.

10. ஏதேனும் வழிகளில் செல்வாக்குகளை பிரயோகிப்பது இந்த பதவிக்கான தகைமையை இழக்கச் செய்யலாம்.

11. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு பின்னர் கிடைக்கப் பெறும் அல்லது மேற்குறித்த சான்றிதழ்களின் பிரதிகளின்றி அனுப்பப்படும் அல்லது திணைக்கள /நிறுவன தலைவர்கள் ஊடாக அனுப்பி வைக்கப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு பின்னர் திணைக்கள தலைவர் ஊடாக கிடைக்கப் பெறும் விண்ணப்பங்களும் மாதிரிப்படிவத்திற்கு அமையத் தயாரிக்கப்படாத விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

டபிள்யூ. பி. டீ. தசநாயக்க
பாராளுமன்றச் செயலாளர் நாயகம்.

இலங்கைப் பாராளுமன்றம்,
ஸ்ரீ ஜயவர்த்தனபுர கோட்டே,
2020, ஓகத்து 21.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கைப் பாராளுமன்றம்**

பிரதி இணைப்பு பொறியியலாளர் பதவி

01. (அ) முதலெழுத்துக்களுடன் பெயர் (தமிழில்) :...............................................................................................
..........................................................................................................................................

(ஆ) முதலெழுத்துக்களால் குறிக்கப்படும் பெயர்கள் (தமிழில்) :.................................................................................
..........................................................................................................................................
..........................................................................................................................

(இ) முழுப்பெயர் - (Mr./Mrs. /Miss) :.........................................................................................................
........................................................................................................ (ஆங்கில கெப்பிற்றல் எழுத்துக்களில்)

02. தேசிய அடையாள அட்டை இலக்கம் : | | | | | | | | | | | | |

03. (அ) தனிப்பட்ட முகவரி:.................................................................................................................
தொலைபேசி இலக்கம்: | | | | | | | | | | |

(ஆ) அலுவலக முகவரி: ......................................................................................................................
தொலைபேசி இலக்கம் : | | | | | | | | | | |

(இ) (பரீட்சைக்கான அனுமதி அட்டையை அனுப்பிவைக்க வேண்டிய முகவரி)

தனிப்பட்ட ☐ அலுவலக ☐

04. (அ) பிறந்த திகதி:.........................................................................................................
(பிறப்புச் சான்றிதழின் பிரதி இணைக்கப்படுதல் வேண்டும்)

(ஆ) விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு வயது:
வருடங்கள்:.........., மாதங்கள்:.........., நாட்கள்:..........

05. விவாகமானவரா /விவாகமாகாதவரா என்ற விபரம் : (விவாகமானவர்/விவாகமாகாதவர்)

06. பால் நிலை : (ஆண் /பெண்)

07. இலங்கைப் பிரசையா எனும் விபரம்: (ஆம்/இல்லை)

08. உயர் கல்வித் தகைமைகள்: (சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படுதல் வேண்டும்.)

| பட்டம் | பல்கலைக்கழகம் | பட்டத்தைப் பெற்ற திகதி |
|---|---|---|
| | | |
| | | |
| | | |

09. தொழில் தகைமைகள்: (சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படுதல் வேண்டும்)
..........................................................................................................................................
..........................................................................................................................................
..........................................................................................................................................

10. அனுபவம்: (சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படுதல் வேண்டும்)

| நிறுவனம் | பதவி | காலம் |
|---|---|---|
| | | |

11. தற்போதைய தொழில் பற்றிய விபரம் :

(அ) நிறுவனத்தின் பெயரும் முகவரியும் :.......................................................................................
..........................................................................................................................................

(ஆ) தற்போது வகிக்கும் பதவி: ..............................................................................................

(இ) முதல் நியமனத் திகதி: ....................................................................................................

(ஈ) மாதாந்த அடிப்படைச் சம்பளம்: ........................................................................................

(உ) கொடுப்பனவுகள்: ..........................................................................................................

(ஊ) முழுமொத்த சம்பளம்: ....................................................................................................

12. நீர் ஏதேனும் குற்றச்செயல் தொடர்பில் நீதிமன்றத்தில் குற்றவாளியாகக் கணிக்கப்பட்டுள்ளீரா? (ஆம்/இல்லை)
அவ்வாறாயின், அது பற்றிய விபரங்களைக் குறிப்பிடுக:
..........................................................................................................................................
..........................................................................................................................................

13. நீர் இதற்கு முன்னர் அரசாங்க சேவையில் பணியாற்றியுள்ளீரா? (ஆம்/இல்லை)
அவ்வாறாயின், அது பற்றிய விபரங்களைக் குறிப்பிடுக:
..........................................................................................................................................
..........................................................................................................................................

என்னால் இந்த விண்ணப்பப்படிவத்தில் தரப்பட்டுள்ள விபரங்கள் யாவும் உண்மையானவை என்றும் சரியானவை என்றும் உறுதிப்படுத்துகின்றேன். இதில் தரப்பட்டுள்ள ஏதேனுமொரு விபரம் தவறானதென அல்லது பொய்யானதென நான் தெரிவு செய்யப்படுவதற்கு முன்னர் கண்டறியப்பட்டால் இப்பதவிக்கு தகுதியற்றவனாவேன் என்பதையும் தெரிவு செய்யப்பட்டதன் பின்னர் அவ்வாறு கண்டறியப்பட்டால் எதுவித நட்டஈடுகளுமின்றி சேவையிலிருந்து நீக்கப்படுவேன் என்பதையும் நன்கறிவேன்.

திகதி: ........................................ ..........................................................
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

---

**திணைக்கள/நிறுவனத் தலைவரின் சான்றிதழ் :**

(அரசாங்க /மாகாண அரசாங்க சேவையில் பணியாற்றும் விண்ணப்பதாரர்களுக்கும் மாத்திரம்)

பாராளுமன்றச் செயலாளர் நாயகம்,

இந்த நிறுவனத்தில் ..................................................................................................................
பதவியை வகிக்கும் திரு./திருமதி/செல்வி ....................................................................................
அவர்களின் விண்ணப்பத்தை சிபாரிசு செய்து சமர்ப்பிக்கின்றேன். அவர் பதவியில் நிரந்தரமாக்கப்பட்டுள்ளார்/ நிரந்தரமாக்கப்படவில்லை. அவரின் வேலைகள் மற்றும் நடத்தை என்பன திருப்திகரமானது என்றும், அவருக்கு எதிரான ஒழுக்காற்று நடவடிக்கைகள் ஏதுமில்லை என்றும், அவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் எதனையும் மேற்கொள்ளும் அபிப்பிராயமில்லை என்றும் சான்றுப்படுத்துகின்றேன். அவர் இப்பதவிக்குத் தெரிவு செய்யப்பட்டால், அவரை சேவையிலிருந்து விடுவிக்க முடியும்/முடியாது.

திகதி: ............................... ..........................................................
திணைக்கள /நிறுவனத்
தலைவரின் கையொப்பம்
(உத்தியோகபூர்வ முத்திரை)

08-639

---

**இலங்கைப் பாராளுமன்றம்**

பாராளுமன்றச் செயலாளர் நாயகத்தின் பணியாட்டொகுதியில் கீழ்க்காணும் பதவிகளில் நிலவும் வெற்றிடங்களுக்கு நல்ல தேகாரோக்கியமும் சிறந்த நல்லொழுக்கமும் உடைய இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இதன் கீழ் காணப்படும் மாதிரிப் படிவத்திற்கு அமைய தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் கல்வித் தகைமை/தொழில் தகைமை மற்றும் அனுபவம் பற்றிய சான்றிதழ்களின் பிரதிகளுடன் 2020 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 04 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக, "பாராளுமன்றச் செயலாளர் நாயகம், இலங்கைப் பாராளுமன்றம், ஸ்ரீ ஜயவர்த்தனபுர கோட்டே" எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பிவைக்கப்படுதல் வேண்டும். விண்ணப்பிக்கப்படும் பதவி கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிடப்பட வேண்டும். (மேலும் இந்த விளம்பரம் பற்றிய விபரங்களை www.parliament.lk எனும் இணையத்தளத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்).

**கவனிக்க**: ஒன்றுக்கு மேற்பட்ட பதவிகளுக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்கள் ஒவ்வொரு பதவிக்கும் என தனித்தனி விண்ணப்பங்களை சமர்ப்பிக்க வேண்டும்.

01. ஹன்சாட் அறிக்கையாளர் (சிங்களம்)
ஹன்சாட் அறிக்கையாளர் (தமிழ்)
ஹன்சாட் அறிக்கையாளர் (ஆங்கிலம்)

01.1 **சம்பள அளவுத்திட்டம்**.- 2016.11.07 ஆந் திகதிய 06/2016 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் I ஆம் அட்டவணைக்கு இணங்க இந்தப் பதவிக்கு உரித்தாகும் மாதாந்த சம்பள அளவுத்திட்டம் ரூபா 47,340.00 - 3 × 755/13 × 1,030- ரூபா 62,995.00 (சகல மேலதிகக் கொடுப்பனவுகளும் அடங்கலாக இந்த சம்பள அளவுத்திட்டத்திற்குரிய ஆரம்ப சராசரி மாதாந்த சம்பளம் ரூபா 95,000.00 ) ஆகும்.

01.2. **கடமைப் பணிகளின் தன்மை**.- பிரதானமாக பாராளுமன்றத்தினதும் பாராளுமன்றக் குழுக்களினதும் கூட்டக் குறிப்புகளை சுருக்கெழுத்துக்களில் எழுதி சரியாகவும் பூரணமாகவும் அறிக்கைகளைத் தயாரித்தல்.

01.3. **வயதெல்லை**.- விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு 18 வயதுக்கு குறையாதவராகவும் மற்றும் 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும் (ஏற்கனவே அரசாங்க /மாகாண அரசாங்க /பாராளுமன்ற சேவையில் நிரந்தரமாக்கப்பட்டுள்ள விண்ணப்பதாரர்களுக்கு இந்த உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது).

01.4. **கல்வித் தகைமைகள்**.-

(அ) கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தரம்) பரீட்சையில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் உரிய மொழி மற்றும் கணிதம் அடங்கலாக 05 திறமைச் சித்திகளுடன் ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

(**உரிய மொழி**.-ஹன்சாட் அறிக்கையாளர் (சிங்களம்) பதவிக்கு சிங்கள மொழி/ ஹன்சாட் அறிக்கையாளர் (தமிழ்) பதவிக்கு தமிழ் மொழி/ ஹன்சாட் அறிக்கையாளர் (ஆங்கிலம்) பதவிக்கு ஆங்கில மொழி)

மற்றும்

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தரம்) பரீட்சையில் (பழைய பாடத் திட்டம்) ஒரே தடவையில் 04 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் /கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தரம்) பரீட்சையில் (புதிய பாடத் திட்டம்) ஒரே தடவையில் 03 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல்.

அல்லது

(ஆ) கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தரம்) பரீட்சையில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் உரிய மொழி மற்றும் கணிதம் அடங்கலாக 05 திறமைச் சித்திகளுடன் ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

(**உரிய மொழி**.-ஹன்சாட் அறிக்கையாளர் (சிங்களம்) பதவிக்கு சிங்கள மொழி/ ஹன்சாட் அறிக்கையாளர் (தமிழ்) பதவிக்கு தமிழ் மொழி/ ஹன்சாட் அறிக்கையாளர் (ஆங்கிலம்) பதவிக்கு ஆங்கில மொழி)

மற்றும்

அரசாங்க/மாகாண அரசாங்க/அரை அரசாங்க நிறுவனம் ஒன்றில் சுருக்கெழுத்தாளர் பதவியில் 10 வருடங்களுக்கு குறையாத அனுபவத்தை பெற்றிருத்தல்.

01.5. **தொழில்சார் தகைமைகள் .-** அங்கீகரிக்கப்பட்ட ஒரு நிறுவனத்திலிருந்து சுருக்கெழுத்து மற்றும் தட்டெழுத்து பற்றிய சான்றிதழை பெற்றிருத்தல் (அரசாங்க /மாகாண அரசாங்க /அரை அரசாங்க நிறுவனம் ஒன்றில் சுருக்கெழுத்தாளர் பதவியில் 10 வருடங்களுக்கு குறையாத அனுபவத்தையுடைய விண்ணப்பதாரர்கள் இந்த சான்றிதழை பெற்றிருக்க வேண்டும் என்ற அவசியமில்லை).

01.5.1. **ஹன்சாட் அறிக்கையாளர் (சிங்களம்)**

(அ) சுருக்கெழுத்து வேகம் - நிமிடம் ஒன்றுக்கு 110 சொற்கள் (90% செவ்வையுடன்)

தட்டெழுத்து வேகம் - நிமிடம் ஒன்றுக்கு 30 சொற்கள் (95% செவ்வையுடன்)

(ஆ) சிங்கள மொழியில் உயர் தேர்ச்சியும் பரந்த பொது அறிவும் பெற்றிருத்தல்.

(இ) ஆங்கில, தமிழ் மொழி அறிவும் மற்றும் கணினி பிரயோகம் பற்றிய அறிவும் மேலதிகத் தகைமைகளாகக் கருதப்படும்.

(ஈ) **பதவியில் நிரந்தரமாக்கல் தொடர்பான நிபந்தனைகள்**

தேர்ந்தெடுக்கப்படும் சிங்கள ஹன்சாட் அறிக்கையாளர்கள் நியமனம் பெற்று ஒரு வருட காலத்தினுள் 95% செவ்வையுடன் நிமிடம் ஒன்றுக்கு 30 சொற்கள் என்ற தட்டெழுத்து வேகப் பரீட்சை ஒன்றில் சித்தியடைதல் வேண்டும். அந்த பரீட்சையில் சித்தியடையத் தவறும் பட்சத்தில் சமயோசித அடிப்படையில் நியமனம் முடிவுறுத்தப்படுவதற்கு அல்லது முன்பிருந்த சேவைக்குத் திருப்பி அனுப்பப்படுவதற்கு நேரிடும்.

01.5.2. **ஹன்சாட் அறிக்கையாளர் (தமிழ்)**

(அ) சுருக்கெழுத்து வேகம் - நிமிடம் ஒன்றுக்கு 110 சொற்கள் (90% செவ்வையுடன்)

தட்டெழுத்து வேகம் - நிமிடம் ஒன்றுக்கு 30 சொற்கள் (95% செவ்வையுடன்)

(ஆ) தமிழ் மொழியில் உயர் தேர்ச்சியும் பரந்த பொது அறிவும் பெற்றிருத்தல்.

(இ) சிங்கள, ஆங்கில மொழி அறிவும் மற்றும் கணினி பிரயோகம் பற்றிய அறிவும் மேலதிகத் தகைமைகளாகக் கருதப்படும்.

(ஈ) **பதவியில் நிரந்தரமாக்கல் தொடர்பான நிபந்தனைகள்**

தேர்ந்தெடுக்கப்படும் தமிழ் ஹன்சாட் அறிக்கையாளர்கள் நியமனம் பெற்று ஒரு வருட காலத்தினுள் 95% செவ்வையுடன் நிமிடம் ஒன்றுக்கு 30 சொற்கள் என்ற தட்டெழுத்து வேகப் பரீட்சை ஒன்றில் சித்தியடைதல் வேண்டும். அந்த பரீட்சையில் சித்தியடையத் தவறும் பட்சத்தில் சமயோசித அடிப்படையில் நியமனம் முடிவுறுத்தப்படுவதற்கு அல்லது முன்பிருந்த சேவைக்குத் திருப்பி அனுப்பப்படுவதற்கு நேரிடும்.

01.5.3. **ஹன்சாட் அறிக்கையாளர் (ஆங்கிலம்)**

(அ) சுருக்கெழுத்து வேகம் - நிமிடம் ஒன்றுக்கு 120 சொற்கள் (90% செவ்வையுடன்)

தட்டெழுத்து வேகம் - நிமிடம் ஒன்றுக்கு 40 சொற்கள் (95% செவ்வையுடன்)

(ஆ) ஆங்கில மொழியில் உயர் தேர்ச்சியும் பரந்த பொது அறிவும் பெற்றிருத்தல்.

(இ) சிங்கள, தமிழ் மொழி அறிவும் மற்றும் கணினி பிரயோகம் பற்றிய அறிவும் மேலதிகத் தகைமைகளாகக் கருதப்படும்.

(ஈ) **பதவியில் நிரந்தரமாக்கல் தொடர்பான நிபந்தனைகள்**

தேர்ந்தெடுக்கப்படும் ஆங்கில ஹன்சாட் அறிக்கையாளர்கள் நியமனம் பெற்று ஒரு வருட காலத்தினுள் 90% செவ்வையுடன் நிமிடம் ஒன்றுக்கு 140 சொற்கள் சுருக்கெழுத்து வேகப் பரீட்சை ஒன்றிலும் மற்றும் 95% செவ்வையுடன் நிமிடம் ஒன்றுக்கு 40 சொற்கள் தட்டெழுத்து வேகப் பரீட்சை ஒன்றிலும் சித்தியடைதல் வேண்டும். அந்த பரீட்சைகளில் சித்தியடையத் தவறும் பட்சத்தில் சமயோசித அடிப்படையில் நியமனம் முடிவுறுத்தப்படுவதற்கு அல்லது முன்பிருந்த சேவைக்குத் திருப்பி அனுப்பப்படுவதற்கு நேரிடும்.

02. **குழு அறிக்கையாளர் பதவி (ஆங்கிலம்)**

02.1. **சம்பள அளவுத்திட்டம்.-** 2016.11.07 ஆந் திகதிய 06/2016 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் I ஆம் அட்டவணைக்கு இணங்க இந்தப் பதவிக்கு உரித்தாகும் மாதாந்த சம்பள அளவுத்திட்டம் ரூபா 43,565.00 - 9×755/ 6×930- ரூபா 55,940.00 (சகல மேலதிகக் கொடுப்பனவுகளும் அடங்கலாக இந்த சம்பள அளவுத் திட்டத்திற்குரிய ஆரம்ப சராசரி மாதாந்த சம்பளம் ரூபா 89,000.00) ஆகும்.

02.2. **கடமைப் பணிகளின் தன்மை.-** பிரதானமாக பாராளுமன்றக் குழுக்களின் கூட்டக் குறிப்புகளை சுருக்கெழுத்துக்களில் எழுதிக் கொண்டு சரியாகவும் பூரணமாகவும் அறிக்கைகளைத் தயாரித்தல்.

02.3. **வயதெல்லை.-** விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு 18 வயதுக்கு குறையாதவராகவும் மற்றும் 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும் (ஏற்கனவே அரசாங்க/மாகாண அரசாங்க சேவையில்/ பாராளுமன்ற சேவையில் நிரந்தரமாக்கப்பட்டுள்ள விண்ணப்பதாரிகளுக்கு இந்த உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது).

02.4. **கல்வித் தகைமைகள்.-**

(அ) கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தரம்) பரீட்சையில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் உரிய மொழி மற்றும் கணிதம் அடங்கலாக 05 திறமைச் சித்திகளுடன் ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

(**உரிய மொழி**:-குழு அறிக்கையாளர் (ஆங்கிலம்) பதவிக்கு ஆங்கில மொழி)

மற்றும்

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தரம்) பரீட்சையில் (பழைய பாடத்திட்டம்) ஒரே தடவையில் 04 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் /கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தரம்) பரீட்சையில் (புதிய பாடத் திட்டம்) ஒரே தடவையில் 03 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல்.

அல்லது

(ஆ) கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தரம்) பரீட்சையில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் உரிய மொழி மற்றும் கணிதம் அடங்கலாக 05 திறமைச் சித்திகளுடன் ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

(**உரிய மொழி**:-குழு அறிக்கையாளர் (ஆங்கிலம்) பதவிக்கு ஆங்கில மொழி)

மற்றும்

அரசாங்க /மாகாண அரசாங்க /அரை அரசாங்க நிறுவனம் ஒன்றில் சுருக்கெழுத்தாளர் பதவியில் 10 வருடங்களுக்கு குறையாத அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

02.5. **தொழில்சார் தகைமைகள்.-** அங்கீகரிக்கப்பட்ட ஒரு நிறுவனத்திலிருந்து சுருக்கெழுத்து மற்றும் தட்டெழுத்து பற்றிய சான்றிதழை பெற்றிருத்தல் (அரசாங்க /மாகாண அரசாங்க /அரை அரசாங்க நிறுவனம் ஒன்றில் சுருக்கெழுத்தாளர் பதவியில் 10 வருடங்களுக்கு குறையாத அனுபவத்தையுடைய விண்ணப்பதாரர்கள் இந்த சான்றிதழை பெற்றிருக்க வேண்டும் என்ற அவசியமில்லை.

(அ) சுருக்கெழுத்து வேகம் -நிமிடம் ஒன்றுக்கு 110 சொற்கள் (90% செவ்வையுடன்)

தட்டெழுத்து வேகம் -நிமிடம் ஒன்றுக்கு 40 சொற்கள் (95% செவ்வையுடன்)

(ஆ) ஆங்கில மொழியில் உயர் தேர்ச்சியும் பரந்த பொது அறிவும் பெற்றிருத்தல்.

(இ) சிங்கள, தமிழ் மொழி அறிவும் மற்றும் கணினி பிரயோகம் பற்றிய அறிவும் மேலதிகத் தகைமைகளாகக் கருதப்படும்.

(ஈ) **பதவியில் நிரந்தரமாக்குவது தொடர்பான நிபந்தனைகள்**

தேர்ந்தெடுக்கப்பட்ட ஆங்கில மொழி குழு அறிக்கையாளர்கள் நியமனம் பெற்று ஒரு வருடத்தினுள் 90% செவ்வையுடன் நிமிடம் ஒன்றுக்கு 120 சொற்கள் சுருக்கெழுத்து வேகப் பரீட்சை ஒன்றிலும் மற்றும் 95% செவ்வையுடன் நிமிடம் ஒன்றுக்கு 40 சொற்கள் தட்டெழுத்து வேகப் பரீட்சை ஒன்றிலும் சித்தி அடைதல் வேண்டும். அந்தப் பரீட்சைகளில் சித்தியடையத் தவறும் பட்சத்தில் சமயோசித அடிப்படையில் நியமனம் முடிவுறுத்தப்படுவதற்கு அல்லது முன்பிருந்த சேவைக்குத் திருப்பி அனுப்பப்படுவதற்கு நேரிடும்.

03. **சுருக்கெழுத்தாளர் (ஆங்கிலம்)**

03.1. **சம்பள அளவுத்திட்டம்**

2016.11.07 ஆந் திகதிய 06/2016 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் I ஆம் அட்டவணைக்கு இணங்க இந்தப் பதவிக்கு உரித்தாகும் மாதாந்த சம்பள அளவுத்திட்டம் ரூபா 32,330.00-3×380/ 10×445 / 4×660-ரூபா 40,560.00 (சகல மேலதிகக் கொடுப்பனவுகளும் அடங்கலாக இந்த சம்பள அளவுத்திட்டத்திற்குரிய ஆரம்ப சராசரி மாதாந்த சம்பளம் ரூபா 69,000.00) ஆகும்.

03.2. **வயதெல்லை.-**

விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு 18 வயதுக்கு குறையாதவராகவும் மற்றும் 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் (ஏற்கனவே அரசாங்க /மாகாண அரசாங்க சேவையில் / பாராளுமன்ற சேவையில் நிரந்தரமாக்கப்பட்டுள்ள விண்ணப்பதாரிகளுக்கு இந்த உச்ச வயதெல்கல ஏற்புடையதாகாது).

03.3. **கல்வித் தகைமைகள்.-**

(அ) கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தரம்) பரீட்சையில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் உரிய மொழி மற்றும் கணிதம் அடங்கலாக 05 திறமைச் சித்திகளுடன் ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

(**உரிய மொழி**:-சுருக்கெழுத்தாளர் (ஆங்கிலம்) பதவிக்கு ஆங்கில மொழி)

மற்றும்

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தரம்) பரீட்சையில் (பழைய பாடத்திட்டம்) ஒரே தடவையில் 04 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் /கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தரம்) பரீட்சையில் (புதிய பாடத் திட்டம்) ஒரே தடவையில் 03 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல்.

அல்லது

(ஆ) கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தரம்) பரீட்சையில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் உரிய மொழி மற்றும் கணிதம் அடங்கலாக 05 திறமைச் சித்திகளுடன் ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

(**உரிய மொழி**:-சுருக்கெழுத்தாளர் (ஆங்கிலம்) பதவிக்கு ஆங்கில மொழி)

மற்றும்

அரசாங்க/ மாகாண அரசாங்க/ அரை அரசாங்க நிறுவனம் ஒன்றில் சுருக்கெழுத்தாளர் பதவியில் 10 வருடங்களுக்குக் குறையாத அனுபவத்தை பெற்றிருத்தல்.

03.4. **தொழில்சார் தகைமைகள்.-**

அங்கீகரிக்கப்பட்ட ஒரு நிறுவனத்திலிருந்து சுருக்கெழுத்து மற்றும் தட்டெழுத்து பற்றிய சான்றிதழை பெற்றிருத்தல் (அரசாங்க / மாகாண அரசாங்க /அரை அரசாங்க நிறுவனம் ஒன்றில் சுருக்கெழுத்தாளர் பதவியில் 10 வருடங்களுக்குக் குறையாத அனுபவத்தையுடைய விண்ணப்பதாரர்கள் இந்த சான்றிதழை பெற்றிருத்தல் வேண்டும் என்ற அவசியமில்லை.

(அ) சுருக்கெழுத்து வேகம் - நிமிடம் ஒன்றுக்கு 100 சொற்கள் (90% செவ்வையுடன்)

தட்டெழுத்து வேகம் - நிமிடம் ஒன்றுக்கு 40 சொற்கள் (95% செவ்வையுடன்)

(ஆ) ஆங்கில மொழியில் உயர் தேர்ச்சியும் பரந்த பொது அறிவும் பெற்றிருத்தல்.

(இ) சிங்கள, தமிழ் மொழி அறிவும் மற்றும் கணினி பிரயோகம் பற்றிய அறிவும் மேலதிகத் தகைமைகளாகக் கருதப்படும்.

(ஈ) **பதவியில் நிரந்தரமாக்குவது தொடர்பான நிபந்தனைகள்**

தேர்ந்தெடுக்கப்பட்ட ஆங்கில மொழி சுருக்கெழுத்தாளர்கள் நியமனம் பெற்று ஒரு வருடத்தினுள் 95% செவ்வையுடன் நிமிடம் ஒன்றுக்கு 40 சொற்கள் தட்டெழுத்து வேகப் பரீட்சை ஒன்றில் சித்தியடைதல் வேண்டும். அந்தப் பரீட்சையில் சித்தியடையத் தவறும் பட்சத்தில் சமயோசித அடிப்படையில் நியமனம் முடிவுறுத்தப்படுவதற்கு அல்லது முன்பிருந்த சேவைக்குத் திருப்பி அனுப்பப்படுவதற்கு நேரிடும்.

04. **ஆட்சேர்ப்பு முறை.-** சுருக்கெழுத்து, மொழி அறிவு மற்றும் பதிப்பு ஆகியன தொடர்பான பரீட்சைகளின் மூலமும் ஒரு நேர்முகப் பரீடசையின் மூலமும் ஆட்சேர்த்துக் கொள்ளப்படும்.

**(விண்ணப்பிக்கப்படும் பதவிக்கான சுருக்கெழுத்து வேகப் பரீட்சைக்காக வேகமாக வாசிக்கப்படும் ஒரு பந்தியை சுருக்கெழுத்தில் குறிப்பெழுதிக் கொண்டு, அதன் பின்னர் வழங்கப்படுகின்ற நேரத்திற்குள் அந்தக் குறிப்புகளை 90% செவ்வையுடன் விரிவாக எழுதிக்கொள்வதற்கு பரீட்சார்த்திகள் எதிர்பார்க்கப்படுகின்றனர்).**

**05. சேவையிலமர்த்தும் நியதிகளும், நிபந்தனைகளும்.-**

(அ) இப்பதவிகள் நிரந்தரமானவையாகும். இந்தப் பதவிகளுக்குரிய ஓய்வூதிய சம்பள முறை தொடர்பாக அரசாங்கம் எதிர்காலத்தில் எடுக்கும் கொள்கை ரீதியான தீர்மானத்திற்கு விண்ணப்பதாரர்கள் இணங்க வேண்டும். தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர்கள் ஆரம்பத்தில் மூன்று (03) வருட தகுதிகாண் காலத்திற்கு உட்படுத்தப்படுவார்கள். அரசாங்க சேவை அல்லது மாகாண அரசாங்க சேவையில் நிரந்தர ஓய்வூதிய உரித்துடைய பதவியில் நிரந்தரமாக்கப்பட்டுள்ள ஆளொருவர் தெரிவு செய்யப்படுவாராயின் அவர் ஒரு வருட கால பதில் கடமை அடிப்படையில் நியமிக்கப்படுவார்.

(ஆ) தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர்கள் பாராளுமன்ற செயலாளர் நாயகத்தின் பணியாட்டொகுதிக்கு ஏற்புடையதான நிதி மற்றும் திணைக்கள ஒழுங்கு விதிகளுக்கு இயைந்தொழுகுதல் வேண்டும்.

(இ) தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர்கள் அரசாங்கத்தினால் நிர்ணயிக்கப்படும் ஒரு விகிதாசாரத்திற்கு அமைய விதவைகள்/ தபுதாரர்கள், அநாதைகள் ஓய்வூதிய நிதியத்திற்கு தமது சம்பளத்திலிருந்து பங்களிப்பு தொகையை செலுத்த வேண்டும். இவர்கள் மருத்துவ பரிசோதனைக்கும் உட்படுத்தப்படுவார்கள்.

(ஈ) தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர்கள் நியமிக்கப்படுவதற்கு முன்னர் அவர்கள் பற்றிய பாதுகாப்பு சான்றறிக்கைகள் பெற்றுக் கொள்ளப்படும்.

06. விண்ணப்பதாரர்கள் பின்வரும் சான்றிதழ்களின் பிரதிகளை (மூலப் பிரதிகள் அல்ல) தத்தமது விண்ணப்பங்களுடன் இணைத்தனுப்புதல் வேண்டும். மூலப் பிரதிகைளைக் கோரும் பட்சத்தில் அவற்றை சமர்ப்பித்தலும் வேண்டும்.

(அ) பிறப்புச் சான்றிதழ் ;

(ஆ) கல்வித் தகைமைகளை உறுதிப்படுத்தும் சான்றிதழ்கள் ;

(இ) தொழில்சார் தகைமைகளை உறுதிப்படுத்தும் சான்றிதழ்கள் ;

(ஈ) அனுபவத்கத உறுதிப்படுத்தும் சான்றிதழ்கள்.

07. அரசாங்க/மாகாண அரசாங்க/அரசாங்க கூட்டுத்தாபனங்களில்/நியதிச்சட்ட சபைகளில் பணியாற்றுகின்ற விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களை உரிய திணைக்கள/ நிறுவனத் தலைவரின் ஊடாக அனுப்பி வைக்க வேண்டும்.

08. பதவியைப் பெற்றுக் கொள்ளும் நோக்கில் ஏதாவது ஒரு வகையில் செல்வாக்கைப் பிரயோகித்தலானது தகுதியின்மைக்கு வழிவகுக்கும்.

09. விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதாவது ஒரு விடயம் தவறானது என ஒருவரை தெரிவு செய்வதற்கு முன்னர் கண்டறியப்பட்டால், அவர் தகுதியற்றவர் எனக் குறிப்பிடப்படுவதற்கும், நியமனத்தின் பின்னர் அவ்வாறு கண்டறியப்பட்டால் சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கும் ஆளாவார்.

10. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு பின்னர் கிடைக்கப் பெறும் அல்லது மேலே குறிப்பிடப்பட்டுள்ள சான்றிதழ்கள் இன்றி அனுப்பப்படும் அல்லது திணைக்கள / நிறுவனத் தலைவர்களினூடாக அனுப்பப் படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதி திகதிக்கு பின்னர் திணைக்கள /நிறுவனத் தலைவர்களின் ஊடாக கிடைக்கப் பெறும் விண்ணப்பங்களும், மாதிரிப்படிவத்திற்கு அமையத் தயாரிக்கப்படாத விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

டபிள்யூ. பி. டீ. தசநாயக்க
பாராளுமன்றச் செயலாளர் நாயகம்.

இலங்கைப் பாராளுமன்றம்,
ஸ்ரீ ஜயவர்த்தனபுர கோட்டே,
2020, ஒகத்து 21.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கைப் பாராளுமன்றம்**

............................................ பதவிக்கான விண்ணப்பப்படிவம்

01. (அ) முதலெழுத்துக்களுடன் பெயர் (தமிழில்) :..............................................................
..............................................................

(ஆ) முதலெழுத்துக்களால் குறிக்கப்படும் பெயர்கள் (தமிழில்) :..............................................
..............................................................
..............................................................

(இ) முழுப்பெயர் (ஆங்கில கெப்பிற்றல் எழுத்துக்களில்) (Mr./Mrs. /Miss) :..............................
..............................................................
..............................................................

02. தேசிய அடையாள அட்டை இலக்கம் : ☐☐☐☐☐☐☐☐☐☐☐☐

03. (அ) சொந்த முகவரி:..............................................................
..............................................................
..............................................................

தொலைபேசி இலக்கம்: ☐☐☐☐☐☐☐☐☐☐

(ஆ) அலுவலக முகவரி: ..............................................................
..............................................................
..............................................................

தொலைபேசி இலக்கம்: ☐☐☐☐☐☐☐☐☐☐

(இ) அனுமதி அட்டையை அனுப்பிவைக்க வேண்டிய முகவரி

தனிப்பட்ட ☐ அலுவலக ☐

04. (அ) பிறந்த திகதி: ஆண்டு :..................... மாதம் :...................... திகதி :...................
(பிறப்புச் சான்றிதழின் பிரதி இணைக்கப்படுதல் வேண்டும்)

(ஆ) விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு வயது: வருடங்கள்:.......... மாதங்கள்:......... நாட்கள்:..........

05. விவாகமானவரா /விவாகமாகாதவரா : (விவாகமானவர்/விவாகமாகாதவர்)

06. பால் நிலை : (ஆண் /பெண்)

07. இலங்கைப் பிரசையா எனும் விபரம்: (ஆம்/இல்லை)

08. கல்வித் தகைமைகள்: (சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படுதல் வேண்டும்.)

| பரீட்சை | பாடம் | பெற்ற சித்திகள் | சித்தியடைந்த ஆண்டு |
|---|---|---|---|
| க. பொ. த. (உ/த) | | | |
| | | | |
| | | | |
| | | | |

| பரீட்சை | பாடம் | பெற்ற சித்திகள் | சித்தியடைந்த ஆண்டு |
|---|---|---|---|
| க. பொ. த. (சா/த) | சிங்களம்/தமிழ் | | |
| | கணிதம் | | |
| | ஆங்கிலம் | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

09. உயர் கல்வி/தொழில் தகைமைகள்: (சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படுதல் வேண்டும்.)
..............................................................
..............................................................
..............................................................

10. அனுபவம்: (சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படுதல் வேண்டும்.)
..............................................................
..............................................................
..............................................................

11. தற்போதைய தொழில் பற்றிய விபரம் :

(அ) நிறுவனத்தின் பெயரும் முகவரியும் :..............................................................

(ஆ) தற்போது வகிக்கும் பதவி: ..............................................................

(இ) முதல் நியமனத் திகதி: ..............................................................

(ஈ) மாதாந்த அடிப்படைச் சம்பளம்: ..............................................................

(உ) கொடுப்பனவுகள்: ..............................................................

(ஊ) மொத்த சம்பளம்: ..............................................................

12. நீர் ஏதேனும் குற்றச்செயல் தொடர்பில் நீதிமன்றத்தில் குற்றவாளியாகக் கணிக்கப்பட்டுள்ளீரா? (ஆம்/இல்லை) அவ்வாறாயின், அது பற்றிய விபரங்களைக் குறிப்பிடுக:
..............................................................
..............................................................

13. நீர் இதற்கு முன்னர் அரசாங்க சேவையில் பணியாற்றியுள்ளீரா? (ஆம்/இல்லை) அவ்வாறாயின், அது பற்றிய விபரங்களைக் குறிப்பிடுக:
..............................................................
..............................................................
..............................................................

என்னால் இந்த விண்ணப்பப்படிவத்தில் தரப்பட்டுள்ள விபரங்கள் யாவும் உண்மையானவையும் சரியானவையும் என உறுதிப்படுத்துகின்றேன். இதில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதாவது ஒரு விபரம் தவறானது அல்லது பொய்யானதென நான் தெரிவு செய்யப்படுவதற்கு முன்னர் கண்டறியப்பட்டால் இப்பதவிக்கு நான் தகுதியற்றவனாவேன் என்பதையும் தெரிவு செய்யப்பட்டதன் பின்னர் அவ்வாறு கண்டறியப்பட்டால் எதுவித நட்டஈடுகளுமின்றி சேவையிலிருந்து நீக்கப்படுவேன் என்பதையும் நன்கறிவேன்.

திகதி: ....................................... ..............................................................
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

**திணைக்கள/நிறுவனத் தலைவரின் சான்றிதழ் :**

(அரசாங்க /மாகாண அரசாங்க நிறுவனங்களில் பணியாற்றும் விண்ணப்பதாரிகளுக்கும் மாத்திரம்)

பாராளுமன்ற செயலாளர் நாயகம்,

இந்த நிறுவனத்தில் .............................................................. பதவியை வகிக்கும் திரு./திருமதி/ செல்வி .............................................................. அவர்களின் விண்ணப்பத்தை சிபாரிசு செய்து சமர்ப்பிக்கின்றேன். இவர் பதவியில் நிரந்தரமாக்கப்பட்டுள்ளார்/ நிரந்தரமாக்கப்படவில்லை. இவரின் வேலைகள் மற்றும் நடத்தை என்பன திருப்திகரமானது என்றும், இவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் ஏதுமில்லை என்றும், இவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் எதனையும் மேற்கொள்ளும் அபிப்பிராயமில்லை என்றும் உறுதிப்படுத்துகின்றேன். இவர் இப்பதவிக்குத் தெரிவு செய்யப்பட்டால், இவரை சேவையிலிருந்து விடுவிக்க முடியும்/முடியாது.

திகதி: .............................. ..............................................................
திணைக்கள /நிறுவனத்
தலைவரின் கையொப்பம்
(உத்தியோகபூர்வ முத்திரை)

# பகுதி I : தொகுதி (IIஆ) - விளம்பரங்கள்

## கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

**இலங்கைப் புகையிரத சேவைகள்**

**பெறுகை அறிவித்தல்**

**கிழக்கு மாவட்டத்திற்கு வழித்தட சரளைக் கற்கள் 12,000 கனசதுரங்களை வழங்குவதற்கான பெறுகை**

**பெறுகை இல. SRS / F.7725**

01. பின்வரும் இடங்களுக்கு வழித்தட கற்களை வழங்குவதற்காக இலங்கை புகையிரத சேவைகள் திணைக்கள பெறுகைக் குழுத் (உயர் மட்டம்) தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை பெற்றுக் கொள்வார். கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஒவ்வொரு அம்சத்திற்கும் தனித்தனியாக இந்த விலைமனுக்கள் மதிப்பீடு செய்யப்பட்டு ஒப்பந்தம் வழங்கப்படும்.

| அம்ச இல. | இடம் | கனசதுரங்கள் | ஒப்படைத்தலுக்கான காலப்பகுதி |
|---|---|---|---|
| 1. | கூன்வெவ | 500 | 04 மாதங்கள் |
| 2. | மொறகொள்ளாகம | 500 | 04 மாதங்கள் |
| 3. | கெக்கிராவ | 2000 | 10 மாதங்கள் |
| 4. | பளுகஸ்வெவ | 1000 | 06 மாதங்கள் |
| 5. | வெலிகந்த | 500 | 04 மாதங்கள் |
| 6. | ரீதீதென்ன | 500 | 04 மாதங்கள் |
| 7. | புனானை | 1000 | 06 மாதங்கள் |
| 8. | வாழைச்சேனை | 1000 | 06 மாதங்கள் |
| 9. | ஏறாவூர் | 2000 | 10 மாதங்கள் |
| 10. | மட்டக்களப்பு | 3000 | 12 மாதங்கள் |

02. மீளளிக்கப்படாத ஆவணக் கட்டணமாக 18,00.00 ரூபாவை மாத்திரம் செலுத்திய பின்னர் 2020.08.27 ஆந் திகதி பி.ப.3.00 மணி வரை கொழும்பு 10, ஒல்கொட் மாவத்தை, புகையிரதக் களஞ்சியசாலைகள் அத்தியட்சகரின் அலுவலகத்திலிருந்து பெற்றுக் கொள்ளக்கூடிய படிவங்களில் மாத்திரமே விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

03. விலைமனுக்கள் 2020.08.28 ஆந் தியதியன்று பி.ப. 2.00 மணிக்கு மூடப்படும்.

04. விலைமனுக்கள் அவைகளை மூடும் நேரத்தின் பின்னர் மூடப்பட்டு உடனடியாகவே புகையிரத களஞ்சியசாலைகள் அத்தியட்சகரின் அலுவலகத்தில் திறக்கப்படும். விலைமனுக்களைத் திறக்கும் வேளையில் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

05. முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் ஒன்றில் பதிவுத் தபாலில் கீழேயுள்ள முகவரிக்கு அனுப்பப்படலாம் அல்லது நேரடியாகவே ஒப்படைக்கப்படலாம் .

தலைவர்,
திணைக்களப் பெறுகைக் குழு, (உயர் மட்டம்)
இலங்கை புகையிரத சேவைகள்,
புகையிரத களஞ்சியசாலைகள் அத்தியட்சகரின் அலுவலகம்,
ஒல்கொட் மாவத்தை, கொழும்பு -10, இலங்கை.

06. விலைமனுக்கோரல் ஆவணங்களை புகையிரத களஞ்சிய சாலைகள் அத்தியட்சகரின் அலுவலகத்தில் இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

தொலைபேசி இலக்கங்கள் : 94(11) 2438078 அல்லது 94(11)2436818.
தொலைநகல் இல. : 94(11) 2432044.
மின்னஞ்சல் : srs.slr.@ gmail.com
இணையத்தளம் : www. railway.gov.lk

தலைவர்,
திணைக்களப் பெறுகைக் குழு( உயர் மட்டம்),
இலங்கைப் புகையிரத சேவைகள்.

குறியீட்டு இலக்கம்.- SRS/F. 7725

8-499

---

## பொருட்கள் விற்பனவும் பிறவும்

**நீதிவான் நீதிமன்றம் - அக்கரைப்பற்று**

அக்கரைப்பற்று நீதிவன் நீதிமன்றத்தினால் பறிமுதல் செய்யப்பட்டுள்ள சான்றுப் பொருட்களின் ஏல விற்பனை- 2020

அக்கரைப்பற்று நீதிவான் நீதிமன்ற வழக்குகளில் பறிமுதல் செய்யப்பட்டதும் உரிமை கோரப்படாத கீழ்க் குறிப்பிடப்படும் பொருட்கள் 2020.08.30ஆந் திகதி காலை 9.00 மணிக்கு இந் நீதிமன்ற வளாகத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

1. இப் பொருட்களுக்காக உரிமை கோருபவர்கள் எவரும் இருப்பின் ஏல விற்பனை தொடங்குவதற்கு முன்னர் தங்களது உரிமைக் கோரிக்கையை முன் வைக்க வேண்டும்.

2. பொருட்களை மன்றின் பதிவாளரின் அனுமதியுடன் ஏல விற்பனை ஆரம்பமாவதற்கு 1/2 மணித்தியாலத்திற்கு முன்பதாக பார்வையிடலாம்.

3. பகிரங்க ஏல விற்பனையின் போது விற்பனைக்காக வைக்கப்பட்டுள்ள பொருட்களுக்குரிய விலை கிடைக்கப் பெறாதவிடத்து ஏல விற்பனையிலிருந்து மீளப் பெறும் உரிமையை மன்று தன்னகத்தே வைத்திருக்கும்.

4. விற்பனை செய்யப்பட்ட பொருட்களுக்கான பணத்தை உடன் செலுத்தி உடனடியாகவே நீதிமன்ற வளாகத்திலிருந்து அகற்ற வேண்டும்.

5. எல்லாக் கொடுப்பனவுகளும் காசாகவே செலுத்துதல் வேண்டும். காசோலைகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

6. பொருட்களைக் கொள்வனவு செய்வோர் தங்களது அடையாளத்தை உறுதிப்படுத்த தேசிய ஆள்அடையாள அட்டையைக் கொண்டு வர வேண்டும்.

எம். எச். எம். ஹம்ஸா,
நீதிவான் /மாவட்ட நீதிபதி,

நீதிவான் நீதிமன்றம்,
அக்கரைப்பற்று.

| தொடர் இல. | வழக்கு இல. | சான்றுப் பொருள் |
|---|---|---|
| 01. | NN-1 | துவிச்சக்கர வண்டி |
| 02. | NN-2 | துவிச்சக்கர வண்டி |
| 03. | NN-3 | துவிச்சக்கர வண்டி |
| 04. | NN-4 | துவிச்சக்கர வண்டி |
| 05. | NN-5 | துவிச்சக்கர வண்டி |
| 06. | NN-6 | துவிச்சக்கர வண்டி |
| 07. | NN-7 | துவிச்சக்கர வண்டி |
| 08. | NN-8 | துவிச்சக்கர வண்டி |
| 09. | NN-9 | துவிச்சக்கர வண்டி |
| 10. | NN-10 | துவிச்சக்கர வண்டி |
| 11. | NN-11 | துவிச்சக்கர வண்டி |
| 12. | NN-12 | துவிச்சக்கர வண்டி |
| 13. | NN-13 | துவிச்சக்கர வண்டி |
| 14. | NN-14 | துவிச்சக்கர வண்டி |
| 15. | NN-15 | துவிச்சக்கர வண்டி |
| 16. | NN-16 | துவிச்சக்கர வண்டி |
| 17. | NN-17 | துவிச்சக்கர வண்டி |
| 18. | NN-18 | துவிச்சக்கர வண்டி |
| 19. | NN-19 | துவிச்சக்கர வண்டி |
| 20. | NN-20 | துவிச்சக்கர வண்டி |
| 21. | NN-21 | துவிச்சக்கர வண்டி |
| 22. | NN-22 | துவிச்சக்கர வண்டி |
| 23. | NN-23 | துவிச்சக்கர வண்டி |
| 24. | NN-24 | துவிச்சக்கர வண்டி |
| 25. | NN-25 | துவிச்சக்கர வண்டி |
| 26. | NN-26 | துவிச்சக்கர வண்டி |
| 27. | NN-27 | துவிச்சக்கரவண்டி |
| 28. | NN-28 | துவிச்சக்கர வண்டி |
| 29. | NN-29 | துவிச்சக்கர வண்டி |
| 30. | NN-30 | துவிச்சக்கர வண்டி |
| 31. | NN-31 | துவிச்சக்கர வண்டி |
| 32. | NN-32 | துவிச்சக்கர வண்டி |
| 33. | NN-33 | துவிச்சக்கர வண்டி |
| 34. | NN-34 | துவிச்சக்கர வண்டி |
| 35. | NN-35 | துவிச்சக்கர வண்டி |
| 36. | NN-36 | துவிச்சக்கர வண்டி |
| 37. | NN-37 | துவிச்சக்கர வண்டி |
| 38. | NN-38 | துவிச்சக்கர வண்டி |
| 39. | NN-39 | துவிச்சக்கர வண்டி |
| 40. | NN-40 | துவிச்சக்கர வண்டி |
| 41. | NN-41 | துவிச்சக்கர வண்டி |
| 42. | AR/232 | துவிச்சக்கர வண்டி |
| 43. | AR/233 | துவிச்சக்கர வண்டி |
| 44. | AR/234 | துவிச்சக்கரவண்டி 2 |
| 45. | AR/235 | துவிச்சக்கர வண்டி |
| 46. | AR/236 | துவிச்சக்கர வண்டி |
| 47. | AR/215/20 | பிளாஸ்டிக் கதிரை- 4 போன் -1 |
| 48. | B/3855 | மோட்டர் |
| 49. | 57883 | பெரல் |
| 50. | 56441 | பெரல் |
| 51. | 58017 | கலன் |
| 52. | 58096 | சிலின்டர், இரும்பு அடுப்பு |
| 53. | 58144 | கலன் |
| 54. | 58149 | சிலின்டர்,கேஸ் அடுப்பு, பெரல் |

| தொடர் இல. | வழக்கு இல. | சான்றுப் பொருள் |
|---|---|---|
| 55. | 57121 | |
| 56. | 57122 | |
| 57. | 57124 | |
| 58. | 57232 | |
| 59. | 57349 | |
| 60. | 57348 | |
| 61. | 57345 | |
| 62. | 57347 | |
| 63. | 57391 | |
| 64. | 57417 | |
| 65. | 57419 | |
| 66. | 57457 | மண் |
| 67. | 57446 | |
| 68. | 57448 | |
| 69. | 57469 | |
| 70. | 57447 | |
| 71. | 57449 | |
| 72. | 57502 | |
| 73. | 57503 | |

| தொடர் இல. | வழக்கு இல. | சான்றுப் பொருள் | தொடர் இல. | வழக்கு இல. | சான்றுப் பொருள் | தொடர் இல. | வழக்கு இல. | சான்றுப் பொருள் |
|---|---|---|---|---|---|---|---|---|
| 74. | 57510 | | 98. | 58299 | | 122. | 58484 | |
| 75. | 57509 | | 99. | 58313 | | 123. | 58515 | |
| 76. | 57544 | | 100. | 58323 | | 124. | 58528 | |
| 77. | 57690 | | 101. | 58326 | | 125. | 58557 | |
| 78. | 57604 | | 102. | 58330 | | 126. | 58602 | |
| 79. | 57677 | | 103. | 58340 | | 127. | 58613 | |
| 80. | 57678 | | 104. | 58377 | | 128. | 58614 | |
| 81. | 57690 | | 105. | 58380 | | 129. | 58658 | |
| 82. | 57691 | | 106. | 58394 | | 130. | 58666 | |
| 83. | 57689 | | 107. | 58395 | | 131. | 58867 | |
| 84. | 57703 | | 108. | 58396 | | 132. | 58703 | |
| 85. | 57777 | மண் | 109. | 58399 | மண் | 133. | 58868 | மண் |
| 86. | 57780 | | 110. | 58400 | | 134. | 58865 | |
| 87. | 58002 | | 111. | 58414 | | 135. | 58726 | |
| 88. | 58068 | | 112. | 58426 | | 136. | 58735 | |
| 89. | 58128 | | 113. | 58427 | | 137. | 58734 | |
| 90. | 58114 | | 114. | 58433 | | 138. | 58733 | |
| 91. | 58115 | | 115. | 58432 | | 139. | 58732 | |
| 92. | 58138 | | 116. | 58431 | | 140. | 58766 | |
| 93. | 58179 | | 117. | 58430 | | 141. | 58769 | |
| 94. | 58245 | | 118. | 58450 | | 142. | 58770 | |
| 95. | 58171 | | 119. | 58454 | | 143. | 58771 | |
| 96. | 58269 | | 120. | 58455 | | 144. | 58782 | |
| 97. | 58267 | | 121. | 58478 | | | | |

08-460

# ஆய விற்பனையும் குத்தகையும்

**2021 ஆம் ஆண்டிற்கான மல்லவபிடிய பிரதேச செயலாளர் பிரிவின் கள்ளுத் தவறணைக்கான குத்தகை விற்பனை**

2021, சனவரி மாதம் 01 ஆந் திகதி முதல் 2021, திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலான காலத்திற்குள் கீழே குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணையில் காணப்படும் கள்ளுத்தவறணைகளில் நொதித்த கள்ளு சில்லறைக்கு விற்பனை செய்வதற்கு முழுமையான சலுகைகளுடன் வாங்குவதற்காக 1982, ஓகத்து 20 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிச குடியரசின் இலக்கம் 207 ஐக் கொண்ட வர்த்தமானியில் சுங்கவரி ஆணையாளரினால் பிரசுரிக்கப்பட்ட கள்ளு விற்பனை செய்வதற்கான நிபந்தனைகளுக்கு உட்பட்டு 2020.09.10 ஆந் திகதி மு.ப. 10.30 மணி வரையில் மல்லவபிடிய பிரதேச செயலாளரினால் விலைமனு ஏற்றுக்கொள்ளப்படும்.

2. கள்ளுத்தவறணையை வாடகைக்கு வாங்குவதற்கு முன்வருபவர்கள் குறித்த விலைமனு மாதிரிப் படிவத்தை உரியவாறு பூர்த்தி செய்து கீழே காட்டப்பட்டுள்ள அட்டவணைக்கு குறித்துரைக்கப்பட்ட விலைமனு வைப்புத் தொகையைச் செலுத்தி ஏதாவது ஒரு பிரதேச செயலகத்தில் காசாளர் கிளையில் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டையும், மேலே காட்டப்பட்டுள்ள வர்த்தமானி அறிவித்தலில் கள்ளு விற்பனை நிபந்தனைகளில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு பெற்றுக் கொண்ட பெறுமதி சான்றிதழுடன் உறையில் இட்டு அதற்கு முத்திரை இட்டு,அவ்வுறையில் இடது மூலையில் தான் விலைமனு கோறுகின்ற கள்ளுத் தவறணையின் பெயர் மற்றும் இலக்கத்தைத் தெளிவாக எழுதி உப அட்டவணையில் காட்டப்பட்டுள்ள இறுதி நேரத்திற்கு முன் கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அல்லது இப் பிரதேச செயலகத்தில் இதற்காக வைக்கப்பட்டுள்ள விலைமனுப் பெட்டியில் இடுவதன் மூலம் மல்லவபிடிய பிரதேச செயலாளருக்கு கிடைக்குமாறு செய்ய முடியும். குறித்த மாதிரி விண்ணப்பப் படிவத்தை ஏதாவது ஒரு பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.

3. விலைமனுதாரர்களினால் விலைனுப் பத்திரத்தைப் பூர்த்தி செய்யும்போது விலைமனுப் பத்திரத்திரங்களில் செய்யப்படுகின்ற அனைத்து மாற்றங்களுக்கும் விலைமனுதாரரின் முழுமையான கையொப்பத்தையிட்டு உறுதிப்படுத்த வேண்டும்.

4.விலைமனு ஏற்றுக்கொள்ளப்படுகின்ற இறுதித் திகதியான 2020, செத்தெம்பர் மாதம் 10 ஆந் திகதி மு.ப.10.30 மணிக்கு அனைத்து கேள்விதாரர்களும் இப் பிரதேச செயலகத்திற்கு வருகை தர வேண்டும்.

5.எவ்வித காரணங்களும் அறிவிக்காமல் விலைமனுப் பத்திரங்கள் அல்லது விலைமனு பத்திரம் அனைத்தையும் நிராகரிக்கும் உரிமை மல்லவபிடிய பிரதேச செயலாளருக்கு உரித்தானதாகும்.

6. தனிச்சலுகையுடன் வாங்கிய நபர் என்று அறிக்கைப்படுத்திய பின் வெற்றிகரமான விலைமனுதாரர்களினால் அவ்வாறு அறிவிக்கப்படும் திகதி பி.ப. 2.00 மணிக்கு பிரதேச செயலாளரினால் குறிப்பிடப்படும் தொகையினை பாதுகாப்பு பிணையினை செலுத்தி விற்பனை நிபந்தனைகளுக்கு கையொப்பமிட வேண்டும்.

7.கள்ளுத்தவறணைகளை கொண்டு நடாத்துவதற்காக விலைமனுதாரர்களினால் பொதுமக்களின் எதிர்ப்பு ஏற்படாத தகுந்த இடம் ஒன்றினை தேர்ந்தெடுத்தல் வேண்டும். தேர்ந்தெடுக்கப்பட்ட இடத்தில் உடற்தகுதி சம்பந்தமாக விலைமனு வழங்கப்பட்ட திகதியில் இருந்து 30 நாட்களுக்குள் வெற்றிகரமான விலைமனுதாரரினால் அதுபற்றி பிரதேச செயலாளரின் அனுமதியினைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

8. 2020, செத்தெம்பர் 10 ஆந் திகதி கள்ளு விற்பனையில் திருப்திகரமான கோரிக்கை இல்லாவிட்டால் 2020.10.28 ஆந் திகதி மு.ப. 10.30 மணிக்கு மீண்டும் கள்ளு விற்பனை இவ்விடத்தில் கொண்டு நடாத்தப்படும்.

9. மேலதிக தகவல் தேவைப்படின் இப்பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.

என்.ஏ.ஏ.எஸ். பிரியங்கர,
பிரதேச செயலாளர்,
மல்லவபிடிய.

2020, யூலை 31 .

**அட்டவணை**

**மல்லவபிடிய பிரதேச செயலகப் பிரிவில் கள்ளுத் தவறணைக்கான அனுமதி- 2021**

| பெயர் மற்றும் இலக்கம் | பத்துவ | கள்ளுத் தவறணை திறக்க வேண்டிய பிரதேசம் | விலைமனு வைப்புப் பணம் | விலைமனு மூடப்படும் திகதி மற்றும் நேரம் | கள்ளுத் தவறணை திறக்க வேண்டிய நேரம் | கள்ளுத் தவறணை மூடப்பட வேண்டிய நேரம் |
|---|---|---|---|---|---|---|
| கடுபிடிய இலக்கம் 01 | வேவுட வில்லி ஹத்பத்துவ | கடுபிடிய | ரூபா 1000 | 2020.09.10 மு.ப.10.30 | மு.ப.11.00 மற்றும் பி.ப.5.00 | பி.ப.2.00 மற்றும் பி.ப.8.00 |

8-533

---

**2021 ஆம் ஆண்டுக்கான கள்ளுத்தவறணை குத்தகை விற்பனை - வத்தளை பிரதேச செயலாளர் பிரிவு**

2021 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி முதல் 2021 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதி வரையுள்ள காலத்தில் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள கள்ளுத்தவறணையில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கமைய சில்லறையாக கள்ளு விற்பனை செய்வதற்கான கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் போது நிபந்தனைகளுக்கு அமைவாகவும் 1982 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கள்ளுத் தவறணைகளைக் குத்தகைக்கு விடும் நிபந்தனைகளுக்கு அமைவாகவும்.

2. ஒவ்வொரு பிரதேச செயலகத்திலும் பெற்றுக்கொள்ளக்கூடிய உரிய படிவங்களில் கேள்வியைச் சமர்ப்பிப்பதுடன் கீழ் அட்டவணையில் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள விளம்பரங்களுக்கமைய வைப்புப் பணமாக பிரதேச செயலகத்தில் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டும் விண்ணப்பிக்கும் தொகையில் 15% பெறுமதியுள்ள அத்தாட்சிச் சான்றிதழும் இணைக்கப்படல் வேண்டும்.

3. கேள்விப்பத்திரங்கள் முறையாக முத்திரையிடப்பட்ட உறையில் இட்டு இடதுபக்கத்தின் மேல் மூலையில் தவறணையின் பெயரையும் இலக்கத்தையும் "............................................ இலக்க ............................ கள்ளுத் தவறணைக்குரிய கேள்விப்பத்திரம்" எனக் குறிப்பிடப்படல் வேண்டும். கள்ளுத் தவறணைக்குரிய கேள்விப்பத்திரம் 2020.09.21 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு முன்னர் வத்தளை பிரதேச செயலாளருக்கு கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும் அல்லது மேற்குறிப்பிடப்பட்ட காலத்திற்குள் வத்தளை பிரதேச செயலாளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பத்திர பெட்டியினுள் இடவேண்டும்.

4. கேள்விப்பத்திரங்கள் 1982, ஓகத்து 20 ஆந் திகதியன்று 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையில் குறிப்பிடப்பட்டுள்ள கள்ளுத்தவறணைகளைக் குத்தகைக்கு விடும் நிபந்தனைகளுக்கு அமைவாக இருத்தல் வேண்டும்.

5. 2020.09.21 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு கேள்விப்பத்திரங்களை ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்த உடனே எல்லாக் கேள்விப்பத்திரங்களும் திறக்கப்படும். அத்தருணம் கேள்விப்பத்திர கோரிக்கைக்காரர்கள் வத்தளை பிரதேச செயலகத்திற்கு சமுகமளித்திருத்தல் வேண்டும்.

6. குறிப்பிட்ட தினத்தில் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட நிபந்தனைகளுக்கமைய விற்பனை செய்யத்தவறும் தவறணைகள் எதுவுமிருப்பின் இவைகளுக்கான விற்பனை மீண்டும் 2020.11.16 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு வத்தளை பிரதேச செயலகத்தில் நடைபெறும்.

7. இது பற்றிய மேலதிக விபரங்களை வத்தளை பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

பீ. டீ.டீ.சீ.ராஜிகா,
பிரதேச செயலாளர்,
வத்தளை.

பிரதேச செயலகம்,
வத்தளை.

**அட்டவணை**

| இலக்கம் | பிரதேசம் | கிராமம் | கேள்விப்பத்திரம் ஏற்கும் இறுதித் திகதியும் நேரமும் | கேள்விப்பத்திர வைப்புப் பணம் ரூபா |
|---|---|---|---|---|
| 1. | வத்தளை | 01. திம்பிரிகஸ்யாய | 2020.09.21 - மு. ப. 10.30 | 7,260.00 |
| 2. | வத்தளை | 02. உஸ்வெடகெய்யாவ | 2020.09.21 - மு. ப. 10.30 | 4,840.00 |
| 3. | வத்தளை | 03. போபிட்டிய | 2020.09.21 - மு. ப. 10.30 | 7,260.00 |
| 4. | வத்தளை | 04. மஹவத்த | 2020.09.21 - மு. ப. 10.30 | 6,050.00 |

8-600

# உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

### பொது அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் கீழ் பொறுப்பு வரையறுக்கப்பட்ட கம்பனி யொன்றை கூட்டிணைத்தல்.-*

கம்பனியின் பெயர் : சிலோன் கொன்டிமென்ட் (பீவீ்டீ) எல்டீடி
கம்பனி இலக்கம் : பீவீ 00225018
கூட்டிணைக்கப்பட்ட திகதி: 2020.07.26
கம்பனியின் பதிவு செய்யப்பட்ட
அலுவலகம்: 16/1, மொஹிடீன் டெரஸ்,
வார்ட் பிளேஸ், கொழும்பு 07,
இலங்கை

கே.ஏ.எம்.எச்.கொடிதுவக்கு,
(சட்டத்தரணி) கம்பனிச் செயலாளர்.

8- 441

---

### அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

லீபங் கோபுரம், 11 ஆம் மாடி, இல. 888, சீயுங் ஷா வன் றோட், கவ்லூன், ஹொங்கொங் ஐ எமது முகவரியாகக் கொண்ட லீ அண்ட் பங்க் (எக்ஸ்போட்) லிமிட்டட் ஆகிய நாம், 2008 ஆம் ஆண்டு யூலை மாதம் 28 ஆந் திகதி 16-19 ஆம் மாடிகள் , பிறின்ஸஸ் கட்டிடம், மத்திய ஹொங்கொங் எனும் முகவரியைச் கொண்ட திரு.றொபின் சோமர்ஸ் பேர்ட் எனும் ஹொங்கொங் SAR ஐச் சேர்ந்த பிரபல நொத்தாரிசினால் உறுதிப்படுத்தப்பட்டு எமது அற்றோணித் தத்துவக்காரராக திரு. வஜிரசிறி சந்திரானந்த குலசிங்க என்பவரை நியமித்த அற்றோணித் தத்துவத்தை அவரின் வேண்டுகோளின்படி 2020 ஆம் ஆண்டு மே மாதம் 21 ஆந் திகதி முதல் இரத்துச் செய்துள்ளோம் என்பதை இத்தால் அறியத்தருகின்றோம்.

8-451

---

### அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

(இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2007ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கூட்டிணைக் கப்பட்ட, பதிவிலக்கம் பீவீ 7453 ஐ உடைய மற்றும் சீதுவ, மூகலங்கமுவை, நீர்கொழும்பு வீதி, இல. 531/2 எனும் முகவரியில் பதிவு செய்யப்பட்ட அலுவலகம் இருக்கின்ற கலம்போ கார்கோ எக்ஸ்பிரஸ் லிமிட்டட்டின் பணிப்பாளர்கள்) தொன் சந்திரசோம கசார (கடவுச்சீட்டு இல. 093110566) மற்றும் அனுக கசார (கடவுச்சீட்டு இல. 2428321) ஆகிய நாங்கள் மஸ்ஜித் வீதி, கிருலப்பனை இல. 11 எனும் முகவரியில் வசிக்கும் மின்னேரி கமகே தொன் சமரக்கொடி பெரேரா (தே.அ.அ.இல.581681801V) என்பவருக்கு வழங்கப்பட்ட பிரசித்த நொத்தாரிசு பீ.டீ.பீ.கே. சேனாரத்ன என்பவரால் 2012.01.11 ஆந் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டு இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு பதிவாளர் நாயகத் திணைக்களத்தின் தெல்கந்த, மேற்கு வலய அலுவலகத்தில் 91 ஆம் பிரிவு 61 ஆவது பத்திரத்தில் இலக்கம் 1741 இன் கீழ் 2012.03.06 ஆந் திகதி பதிவு செய்யப்பட்ட 543 ஆம் இலக்கமுடைய விசேட அற்றோணித்தத்துவம் இத்தால் இரத்துச் செய்யப்பட்டு இல்லாதொழிக்கப்படுவதாக இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் அதன் பொது மக்களுக்கும் அறிவித்துக் கொள்கின்றோம்.

2020.08.10 ஆந் திகதியிலிருந்து அற்றோணித் தத்துவகாரரான மின்னேரி கமகே தொன் சமரக்கொடி பெரேராவினால் மேற்கொள்ளப்படும் ஏதேனும் நடவடிக்கைக்கு நாம் பொறுப்பாளியல்ல என்றும் இத்தால் தெரிவிக்கின்றோம்.

தொன் சந்திரசோம கசார,
அனுக கசார.

8-673

### அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

( இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கூட்டிணைக் கப்பட்ட, பதிவிலக்கம் பீவீ 7453 ஐ உடைய மற்றும் சீதுவ, மூகலங்கமுவை, நீர்கொழும்பு வீதி, இல. 531/2 எனும் முகவரியில் பதிவு செய்யப்பட்ட அலுவலகம் இருக்கின்ற கலம்போ கார்கோ எக்ஸ்பிரஸ் லிமிட்டட்டின் பணிப்பாளர்கள்) தொன் சந்திரசோம கசார (கடவுச்சீட்டு இல. 093110566) மற்றும் அனுக கசார (கடவுச்சீட்டு இல. 2428321) ஆகிய நாங்கள் மஸ்ஜித் வீதி, கிருலப்பனை இல. 11 எனும் முகவரியில் வசிக்கும் மின்னேரி கமகே தொன் சமரக்கொடி பெரேரா (தே.அ.அ.இல.581681801V) என்பவருக்கு வழங்கப்பட்ட பிரசித்த நொத்தாரிசு எம். வீ. எஸ். பிரேமதாச என்பவரால் 2011.09.28 ஆந் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டு இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு பதிவாளர் நாயகத் திணைக்களத்தின் நுகேகொட, தெல்கந்த, மேற்கு வலய அலுவலகத்தில் 80 ஆம் பிரிவு 82 ஆவது பத்திரத்தில் இலக்கம் 6519 இன் கீழ் 2011.09.29 ஆந் திகதி பதிவு செய்யப்பட்ட 1734 ஆம் இலக்கமுடைய விசேட அற்றோணித்தத்துவம் இத்தால் இரத்துச் செய்யப்பட்டு இல்லாதொழிக்கப்படுவதாக இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் அதன் பொது மக்களுக்கும் அறிவித்துக் கொள்கின்றோம்.

2020.08.10 ஆந் திகதியிலிருந்து அற்றோணித் தத்துவகாரரான மின்னேரி கமகே தொன் சமரக்கொடி பெரேராவினால் மேற்கொள்ளப்படும் ஏதேனும் நடவடிக்கைக்கு நாம் பொறுப்பாளியல்ல என்றும் இத்தால் தெரிவிக்கின்றோம்.

தொன் சந்திரசோம கசார,
அனுக கசார.

8-674

# ஏல விற்பனைகள்

### டிஎப்சீசீ வங்கி பீஎல்சீ

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேடஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ் பகிரங்க ஏல விற்பனை*

**மிகவும் பெறுமதிமிக்க வசிப்பிடத்திற்குப் பொருத்தமான சொத்து , மட்டக்களப்பு மாவட்டம், ஏறாவூர் பற்று செங்கலடி பிரதேச செயலாளர் பிரிவு மற்றும் ஏறாவூர் பற்று பிரதேச சபை எல்லைக்குட்பட்ட செங்கலடி கிராம அலுவலர் பிரிவு செங்கலடி கிராமத்தில் பதுளை பாதையில் அமைந்துள்ள காணி உரிமம் பெற்ற நிலஅளவையாளர் A.M.நஜூவுடீன் என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2014.09.23 ஆந் திகதிய AMN/ 14/ EP/ 4339 ஆம் இலக்க வரைபடத்தில் குறிக்கப்பட்ட லொட் 01 எனும் காணித்துண்டும் அதனுள்ளடங்கும் மரங்கள், பயிர்கள் மற்றும் சகலதுமாகும். இது 01 றூட் 04.86 பேர்ச்சஸ் பரப்பளவானது.**

**ஆதனத்தை வந்தடைதல்.-** மட்டக்களப்பு நகரத்திலிருந்து திருகோணமலை பாதையில் செங்கலடி மஹஓய சந்தி வரை வந்து இடது பக்கமாக திரும்பி மஹஓய பாதைக்குப் பிரவேசித்து சுமார் 200 மீற்றர் தூரம் சென்று இடதுபக்கமாகவுள்ள மணற் பாதைக்குத் திரும்பி அப்பாதையில் சுமார் 60 மீற்றர் தூரம் சென்றால் பாதையின் இறுதியில் இவ்வாதனம் அமைந்துள்ளது.

இவ்வாதனம் மட்டக்களப்பைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை மஹேந்திரகுமார் என்பவர் கடப்பாடுடையவராக டிஎப்சீசீ வங்கி பீஎல்சீ சார்பாக பிரசித்த நொத்தாரிசு J.N.C. நிருஜா என்பவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 30 மற்றும் 414 ஆம் இலக்க முறியின் மூலம் டிஎப்சீசீ வங்கிக்கு ஈடுவைக்கப்பட்ட ஆதனம்.

**2020.09.14 ஆந் திகதி மு. ப.10.15 மணிக்கு ஆதனம் அமைந் துள்ள அதே இடத்தில் என்னால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.**

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு.-** 2018.09.28 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும், 2018.09.17 ஆந் திகதிய திவயின, த ஐலன்ட் மற்றும் 2018.09.19 ஆந் திகதிய தினக்குரல் ஆகிய பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**கொடுப்பனவு முறை.-** விற்பனை தீர்க்கப்பட்டவுடன் கொள்முதல் செய்தவரினால் கீழ்க்காணும் விதத்தில் கொடுப் பனவுகள் ரொக்கப் பணமாகச் செலுத்துதல் வேண்டும்:-

(1) கொள்முதல் விலையில் 10% (நூற்றுக்கு பத்து) ;
(2) பிரதேச சபைக்குச் செலுத்த வேண்டிய வரி 1 % ( நூற்றுக்கு ஒன்று) ;
(3) ஏல விற்பனையாளர் கட்டணம் விற்பனை விலையில் 2 1/2% (நூற்றுக்கு இரண்டரை) ;
(4) சகல பகிரங்கப்படுத்தல் செலவு ;
(5) இலிகிதர் மற்றும் கூவுவோர் கட்டணம் ரூபா 1500 ;
(6) நொத்தாரிசுக் கட்டணமும் விற்பனை நிபந்தனை அத்தாட்சிப் படுத்தல் கட்டணமும் ரூபா 2000 .

கொள்முதலில் மிகுதி 90% உம், இலங்கை அரசினால் அல்லது வேறு அதிகார சபையினால் விதிக்கப்படும் வேறு வரிகளும், தீர்வை வரி, விற்பனை வரி அல்லது வேறு கட்டணங்கள் ஏதாயினும் செலுத்தப்பட இருப்பின் அவற்றுடன் விற்பனை நாளிலிருந்து 30 நாட்களுக்குள் செலுத்தப்படுதல் வேண்டும்.

**உரித்தாதனம் மற்றும் விபரங்களுக்கு:** முகாமையாளர், சட்டப் பிரிவு டிஎப்சீசீ வங்கி பீஎல்சீ , இல.73, டபிள்யு.ஏ.டி இராமநாயக்க மாவத்தை, கொழும்பு 02. தொலைபேசி: 011-2 371 371.

ஐ. டபிள்யூ. ஜயசூரிய,
நீதிமன்றங்கள் மற்றும் வர்த்தக
வங்கிகளினால் உத்தரவாதம்
பெற்ற ஏல விற்பனையாளர்.

இல. 369/1, துட்டுகெமுனு மாவத்தை,
லேவெல்ல பாதை,
மாவில்மடை,
கண்டி.

தொலை பேசி இல.: 081-2210595/071- 8446374/071-4962449

8-468

---

### டிஎப்சீசீ வங்கி பீஎல்சீ

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ் பகிரங்க ஏல விற்பனை*

**மிகவும் பெறுமதிமிக்க வசிப்பிடத்திற்குப் பொருத்தமான சொத்து , மட்டக்களப்பு மாவட்டம், மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் பிரிவு, மட்டக்களப்பு நகர சபை எல்லைக்குட்பட்ட ஊரணி கிராம அலுவலர் பிரிவு சின்ன ஊரணி கிராமத்தில், திருகோணமலை பாதையில் அமைந் துள்ள காணி உரிமம் பெற்ற நில அளவையாளர் K. கமல நாதன் என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2013.03.17 மற்றும் 19 ஆந் திகதிய KK/ BT/ 2013/ 154Vஆம் இலக்க வரைபடத்தில் குறிக்கப்பட்ட லொட் 01 எனும் காணித்துண்டும் அதனுள்ளடங்கும் மரங்கள், பயிர்கள் மற்றும் சகலதுமாகும். இது 14.90 பேர்ச் பரப்பளவானது.**

இவ்வாதனம் மட்டக்களப்பைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை மஹேந்திரகுமார் என்பவர் கடப்பாடுடையவராக டிஎப்சீசீ வங்கி பீஎல்சீ சார்பாக அத்தாட்சிப்படுத்தப்பட்ட 412 / 476 ஆம் இலக்க முறியின் மூலம் டிஎப்சீசீ வங்கிக்கு ஈடுவைக்கப்பட்ட ஆதனம்.

**ஆதனத்தை வந்தடைதல்.-** மட்டக்களப்பு நகரத்திலிருந்து திருகோணமலை பாதையில் சுமார் 2.5 கி.மீ. தூரம் Tata வாகன தரிப்பிடத்திற்கு ( Yard) முன்னர் உள்ள கிளை பாதைக்குத் திரும்பி அப்பாதையில் சுமார் 50 மீற்றர் தூரம் சமிக்ஞை கம்பம் வரை வந்து இடது பக்கமாகவுள்ள தனியார் பாதைக்குப் பிரவேசித்து இறுதி வரை சென்றால் பாதையின் இடதுபக்கத்தில் இவ்வாதனம் அமைந்துள்ளது.

2020.09.14 ஆந் திகதி மு. ப.9.30 மணிக்கு ஆதனம் அமைந் துள்ள அதே இடத்தில் என்னால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு.-** 2018.09.28 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும், 2018.09.17 ஆந் திகதிய “திவயின”, “த ஐலன்ட் ” மற்றும் 2018.09.19 ஆந் திகதிய “தினக்குரல் ” ஆகிய பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**கொடுப்பனவு முறை.-** விற்பனை தீர்க்கப்பட்டவுடன் கொள்முதல் செய்தவரினால் கீழ்க்காணும் விதத்தில் கொடுப் பனவுகள் ரொக்கப் பணமாகச் செலுத்துதல் வேண்டும்:-

(1) கொள்முதல் விலையில் 10% (நூற்றுக்கு பத்து) ;
(2) பிரதேச சபைக்குச் செலுத்த வேண்டிய வரி 1 % ( நூற்றுக்கு ஒன்று) ;
(3) ஏல விற்பனையாளர் கட்டணம் விற்பனை விலையில் 2 1/2% (நூற்றுக்கு இரண்டரை) ;
(4) சகல பகிரங்கப்படுத்தல் செலவு ;
(5) இலிகிதர் மற்றும் கூவுவோர் கட்டணம் ரூபா 1500 ;
(6) நொத்தாரிசுக் கட்டணமும் விற்பனை நிபந்தனை அத்தாட்சிப் படுத்தல் கட்டணமும் ரூபா 2000.

கொள்முதலில் மிகுதி 90% உம், இலங்கை அரசினால் அல்லது வேறு அதிகார சபையினால் விதிக்கப்படும் வேறு வரிகளும், தீர்வை வரி, விற்பனை வரி அல்லது வேறு கட்டணங்கள் ஏதாயினும் செலுத்தப்பட இருப்பின் அவற்றுடன் விற்பனை நாளிலிருந்து 30 நாட்களுக்குள் செலுத்தப்படுதல் வேண்டும்.

**உரித்தாதனம் மற்றும் விபரங்களுக்கு:** முகாமையாளர், சட்டப் பிரிவு டிஎப்சீசீ வங்கி பீஎல்சீ , இல.73, டபிள்யு.ஏ.டி இராமநாயக்க மாவத்தை, கொழும்பு 02.

தொலைபேசி: 011-2 371 371.

ஐ. டபிள்யூ. ஜயசூரிய,
நீதிமன்றங்கள் மற்றும் வர்த்தக
வங்கிகளினால் உத்தரவாதம்
பெற்ற ஏல விற்பனையாளர்.

இல. 369/1, துட்டுகெமுனு மாவத்தை,
லேவெல்ல பாதை,
மாவில்மடை, கண்டி.
தொலை பேசி இல.: 081-2210595/071- 8446374/
071-4962449

8-470

---

டிஎப்சீசி வங்கி பீஎல்சீ

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேடஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ் பகிரங்க ஏல விற்பனை

**மிகவும் பெறுமதிமிக்க வசிப்பிடத்திற்குப் பொருத்தமான சொத்து , மட்டக்களப்பு மாவட்டம், ஏறாவூர் பற்று செங்கலடி பிரதேச செயலாளர் பிரிவு மற்றும் ஏறாவூர் பற்று செங்கலடி பிரதேச சபை எல்லைக்குட்பட்ட செங்கலடி கிராம அலுவலர் பிரிவு, செங்கலடி கிராமத்தில் செங்கலடி பதுளை பாதையில் அமைந்துள்ள காணி உரிமம் பெற்ற நிலஅளவையாளர் K.கமலநாதன் என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2016.09.25 ஆந் திகதிய KK/ BT/ 2016/ 1370L ஆம் இலக்க வரைபடத்தில் குறிக்கப்பட்ட லொட் 01 எனும் காணித்துண்டும் மற்றும் அதனுள்ளடங்கும் கட்டிடங்கள், மரங்கள், பயிர்கள் மற்றும் சகலதுமாகும். மேற்குத் திசையிலுள்ள ஒற்றையடிப் பாதையை உபயோகிக்கும் உரிமையும் உண்டு. இது 01 றூட் 9.02 பேர்ச்சஸ் பரப்பளவானது.**

